
https://telegram.me/aedahamlibrary
அதிகாரம்
அமைதி
சுதந்திரம்
சாரு நிவேதிதா

https://telegram.me/aedahamlibrary

# அதிகாரம் அமைதி சுதந்திரம்

சாரு நிவேதிதா

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

அதிகாரம் அமைதி சுதந்திரம்

Athikaram Amaidhi Sudhanthiram

Ezhutthu Prachuram First Edition: August 2018
(A division of Zero Degree Publishing)

ISBN: 978 93 87707 37 5
Title No EP: 15

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, psychic, or otherwise, without the prior permission of the publishers.

**Ezutthu Prachuram**
(A Division of Zero Degree Publishing)
No.47/11, Dr.Ranga Road
Mylapore
Chennai- 600004

Website: www.zerodegreepublishing.com
E Mail id: zerodegreepublishing@gmail.com
Phone : 98400 65000

Layout : Creative Studio

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மதுரை அருணாசலத்துக்கு...

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

# அதிகாரம் : அமைதி : சுதந்திரம்

நான் கேரளாவுக்குப் பிரசங்கம் செய்யப் போகும்போதெல்லாம் பிரசங்கம் செய்துவிட்டு, குறிப்பெடுத்த காகிதங்களை அப்படியே காற்றில் பறக்க விட்டுவிட்டு வந்து விடுவேன். பேசியதை அப்படியே பத்திரப்படுத்தி வைத்திருந்தால் பிறகு பிரசுரிப்பதற்குப் பயன்படும். அம்மாதிரி ஒழுங்கெல்லாம் என்னிடம் இல்லை. சமீபத்தில், நான் வளர்க்கும் 'ரைட்டர்' தரையில் ரத்தம் சிந்தி விட்டது என்று அதன் மேல் சில காகிதங்களைப் போட்டாள் அவந்திகா. (ஆமாம், அது 'தூரம்'; அதனால்தான் பெண்பால் நாய்களை வீட்டில் வளர்ப்பதில்லை என்று தாமதமாகத் தெரிந்துகொண்டேன். எவ்வளவு பயந்தாங்கொள்ளி பாருங்கள் நான். கை நடுங்க நடுங்க 'பால்' என்ற வார்த்தையை 'பெண்'ணோடு சேர்த்திருக்கிறேன்!)

காகிதங்களில் பார்த்தால் என் கையெழுத்து... பிறகு சர்வ ஜாக்கிரதையாக அதை சோதித்ததில் அந்தக் காகிதங்கள் நான் டிசம்பர் 2007இல் கோட்டயத்தில் நடந்த புத்தகச் சந்தையில் பேசிய பேச்சின் குறிப்புகள் என்று தெரிந்தது. Power: Silence: Freedom என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் பேசிய அந்தப் பேச்சின் தமிழ் வடிவத்தைக் கீழே தந்திருக்கிறேன்.

பேச்சைக் கேட்க வந்தவர்களில் பலர் கல்லூரி மாணவர்கள். எனக்கு முன்னே காலையில் உரையாற்றியவர் மலையாள இலக்கிய உலகில் பிரபலமான எழுத்தாளர் சேது. நான் மாலை நான்கு மணியளவில் உரையாற்றினேன். எனக்குப் பிறகு உரையாற்றியவர் கேரள சாகித்ய அகாதமியின் செயலாளர் எம். முகுந்தன். என்னுடைய உரைக்குப் பிறகு மாணவர்களுடன் நடந்த ஒரு மணி நேர கலந்துரையாடல் மிகவும் சுவாரசியமாகவும், ஆழமான கருத்துப் பரிமாற்றத்துக்கு ஏதுவாகவும் இருந்தது.

https://telegram.me/aedahamlibrary

ஃ ஃ ஃ

நாம் மிகவும் சத்தம் போடுகிறோம். குறிப்பாகத் தென்னிந்தியர்கள். ‘சும்மா இரு சொல் அற’ என்பது சித்தன் வாக்கு. நம் சினிமா சத்தம் போடுகிறது. நாம் ரசிக்கும் பாடல்கள் சத்தம் போடுகின்றன. நமது பேச்சு சத்தமாக இருக்கிறது. நம் தொலைக்காட்சி சத்தமாக இருக்கிறது. 24 மணி நேரமும் இரைச்சல் என்ற கலாச்சார அசிங்கத்திலேயே வாழ்ந்து வாழ்ந்து நமது ரசனையின் நுண்ணுணர்வுகளை இழந்து வந்துகொண்டிருக்கிறோம்.

மிஷெல் ஃபூக்கோ தனது நண்பன் Daniel Schmidt தன்னை சந்தித்தபோது மதியம் மூன்று மணியிலிருந்து நடு இரவு வரை ஒரு வார்த்தைகூட பேசிக்கொள்ளாமல் மௌனமாக இருந்தது பற்றிக் குறிப்பிடுகிறார். அந்தப் பத்து மணி நேரத்தில் அதிக பட்சம் இருபது நிமிடங்களே பேசியிருப்போம் என்கிறார் ஃபூக்கோ.

யோசித்துப் பாருங்கள். நீங்கள் உங்கள் நண்பர்களுடனோ, குடும்பத்தாருடனோ இருக்கும்போது மௌனமாக இருக்க முடியுமா? தொலைக்காட்சிப் பெட்டியை அலற வைத்துவிட்டு நீங்கள் பேசாமல் ‘பார்த்துக் கொண்டு’ இருப்பதை மௌனம் என்று சொல்ல முடியாது.

சத்தம் போடுவதும், இரைச்சலிடுவதும் ஒருவித அதிகாரத்தின் வெளிப்பாடு. ராணுவ அதிகாரியின் உத்தரவுக் கூச்சலை நினைவு கூருங்கள். அக்கூச்சலுக்கு வாய்மூடி அடங்கி அடிபணிகிறார்கள் அதிகாரியின் கீழுள்ள சிப்பாய்கள்.

நம் அன்றாட வாழ்வில் எப்போதுமே நாம் அவ்வாறு அடங்கிவிடுவதில்லை. அலுவலகமாகவோ, கல்லூரியாகவோ இருந்தால் அடங்கி விடுவோம். ஆனால் நமக்குக் கொஞ்சம் சுதந்திரமான இடம் என்று தெரிந்தால் நாமும் பதிலுக்குக் கூச்சல் போடுகிறோம். (உன் அதிகாரத்தை என்னிடம் காட்டாதே!) பல சமயங்களில் இந்தக் கூச்சல்களே நம்முடைய உரையாடலாகவும் இருந்து வருகிறது!

ஆனால் நமது கிழக்காசிய நாடுகளின் பாரம்பரியத்தில் நிசப்தம்தான் வாழ்முறையாக இருந்து வந்திருக்கிறது. இன்றைய உலகில் அமெரிக்கக் கலாச்சாரமே சர்வதேசக் கலாச்சாரமாக வியாபித்திருப்பதால் எந்த நாட்டின் எந்த மூலைக்குச் சென்றாலும் ஆச்சரியப்படும் விதத்தில் நாம் ஒரே விதமான இரைச்சலையே கலாச்சாரம் என்பதாக எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

https://telegram.me/aedahamlibrary

ஞாபகப்படுத்திப் பாருங்கள். கண்களை உறுத்தும் வெளிச்சம் இல்லாத - இருள் சூழ்ந்த இரவுகளில் உங்கள் பாட்டிமார்கள் சொன்ன நூற்றுக் கணக்கான கதைகளும், இள வயதில் நீங்கள் விளையாடிய குழிப்பறா, கொத்தங்கல்லு, குட்டியிங்கோல், கிளித்தட்டு, பகிடா போன்ற விளையாட்டுகளும் இன்று காணாமல் போய்விட்டன. (தமிழில் தாயம், பல்லாங்குழி, பாண்டி போன்ற பல விளையாட்டுகள்). ஒவ்வொரு இனக்குழுச் சமூகமும் தனக்கென்று வைத்திருந்த பிரத்தியேகமான விளையாட்டுகளையும், கதைகளையும், மொழியையும், தொன்மங் களையும் தொலைத்துவிட்டது. அவர்களின் சிறார்கள் இன்று அமெரிக்காவின் விளையாட்டுத் துப்பாக்கிகளை வைத்து ஒருவரையொருவர் சுட்டுப் பழகிக்கொண்டிருக்கின்றனர்.

நமது இந்திய, ஜப்பானிய, சீனப் பாரம்பரியத்தில் நிசப்தம் என்பது ஒரு கலாச்சாரமாகவும், விஞ்ஞானம், தத்துவம் போன்ற துறைகளின் ஆதாரமாகவும் இருந்திருக்கிறது. (உதாரணம்: ஜென், யோகா).

இரைச்சலும், இரைச்சலை அடிப்படையாகக் கொண்ட மனித உரையாடல்களும் தரும் உளவியல் நெருக்கடிகள் இன்று உலகளாவிய முறையில் மனித சமூகத்தை அச்சுறுத்தும் வியாதியாகப் பரவியிருக்கிறது.

நமது அற்புதமான சங்கீதக் கருவிகளான ஷெனாயும், சரோதும் துக்க தினங்களை அனுஷ்டிக்கப் பயன்பட்டுக்-கொண்டிருப்பதைப் போல், துரதிர்ஷ்டவசமாக நாம் மௌனத்தை துக்கத்தின் அடையாளமாக மட்டுமே வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

மௌனம் ஒரு கொண்டாட்டம்.

மௌனம் ஒரு இசை.

மௌனம் ஒரு மொழி.

ஒரு ஜென் குரு தனது நான்கு சீடர்களை இரண்டு வார காலத்துக்கு மௌனம் அனுஷ்டிக்கும்படிக் கூறினார். முதல் நாள், இரவு கவியும் வேளையில் அங்கிருந்த மெழுகுவர்த்தி நின்று போவதுபோல் ஆட ஆரம்பித்து, சிறிது நேரத்தில் நின்றும் போய்விட்டது.

"அடடா, மெழுகுவர்த்தி நின்று போய்விட்டதே!" என்றான் முதல் சீடன்.

"நம்மைத்தான் குரு பேசக் கூடாது என்று சொல்லியிருக்கிறாரே?" என்றான் இரண்டாவது சீடன்.

"ஏன் நீங்கள் இரண்டு பேரும் பேசி மௌனத்தைக் கலைத்தீர்கள்?" என்றான் மூன்றாமவன்.

https://telegram.me/aedahamlibrary

“அப்பாடா, நான்தான் கடைசிவரை பேசவே இல்லை!” - இது நான்காவது சீடன்.

இப்படியாகத்தான் நாம் மௌனத்தின் விதிகளை அனுஷ்டித்துக் கொண்டிருக்கிறோம். இன்னொரு கதை இருக்கிறது. மௌனத்தின் உண்மையான அர்த்தத்தைப் புரிந்துகொள்ளாவிட்டால், மௌனமாக இருந்தும் பயன் இல்லை என்கிறது அந்தக் கதை. ஏனென்றால், பேசப்படும் வார்த்தைகளும்கூட மௌனத்தின் ஆன்மாவைத் தன்னுள் பொதிந்து கொண்டிருக்க வேண்டும்.

ஒரு துறவி ஒவ்வொரு பத்தாண்டுகளுக்கு ஒரு முறைதான் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார். அந்தத் துறவியும் அதேபோல் பத்தாண்டுகள் மௌனத்தை அனுஷ்டித்துவிட்டு முதல்முறையாகப் பேசினார்.

“உணவு ஆறிப் போயிருக்கிறது.”

அடுத்த பத்தாண்டுகள் சென்று மீண்டும் வாய் திறந்தார் துறவி.

“படுக்கை சரியில்லை.”

அடுத்த பத்தாண்டுகள் கழிந்தன. முப்பது ஆண்டுகளின் மௌனத்துக்குப் பிறகு துறவி பேசினார்.

“உணவு இன்னமும் ஆறித்தான் போயிருக்கிறது. படுக்கை இன்னமும்தான் சரியாக இல்லை. நான் கிளம்புகிறேன்.”

நம்முடைய பேச்சும் அந்தத் துறவியின் பேச்சைப் போலவே இருக்கிறது.

சிம்பொனியின் நடுவே வரும் அமைதியை நீங்கள் கவனித்திருக்கலாம். அந்த இடத்தில் மௌனம் இசையாக இருக்கிறது. மௌனமே இசையாக மாறுகிறது.

மௌனம் என்பது இசையின் முடிவு அல்ல என்பது இசை பற்றிய ஓர் அடிப்படைக் கோட்பாடு. Alfred Shnittke என்ற ஒரு ருஷ்ய இசைக் கலைஞர் இருந்தார். அவரது இசை ஆரம்பிக்கும்போதும் சரி, முடியும்போதும் சரி, நமது செவித் திறனுக்கே சவால் விடுவது போல் மிக மென்மையாக இழையும். இசை வருகிறதா இல்லையா என்பதே சந்தேகமாகப் போய்விடும்.

மாணவர்களே! மற்றும் இங்கே கூடியிருக்கும் பெரியோர்களே!

நான் பேசுவதை தயவுசெய்து தியானம் பற்றிய சொற்பொழிவாக அர்த்தப்படுத்திக் கொள்ளாதீர்கள். நான் சொல்வதை இன்றைய

https://telegram.me/aedahamlibrary

நுகர்வுக் கலாச்சாரத்தின் ஊடே வைத்துப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். தொலைக்காட்சி சீரியல்களும், விளம்பரங்களும், வானொலி நிகழ்ச்சிகளும், அவற்றில் காணும் இடைவிடாத சொற் கூச்சல்களும் ஒரு சப்த நரகத்தையே (decibal inferno) உண்டாக்கிக் கொண்டிருக்கின்றன. நமது உள்ளாடைகளிலிருந்து வாழ்க்கைத் துணை வரை எல்லாமே கிடைக்கின்றன என்று ஹிஸ்டீரியா நோயாளிகளைப் போல் கத்திக் கொண்டிருக்கின்றன விளம்பரங்கள். ஒரு பெண் ஒரு நிமிடத்தில் எத்தனை வார்த்தைகளை மூச்சு விடாமல் கத்துகிறாள் என்பதை வைத்தே அவள் பிரபலம் அடைகிறாள்; அதை வைத்தே அவளுடைய வெற்றி தோல்வியும் நிர்ணயிக்கப்படுகிறது. விளம்பரங்களில் பெண்களின் உடல் வெறும் ஒரு விற்பனைப் பொருளைப் போல் (commodity) காண்பிக்கப்படுகின்றது. இன்றைய விளம்பரத் துறை என்பதே பெண்களை ஒட்டுமொத்தமாக அவமானப்படுத்தும் துறையாகத்தான் இருந்து வருகிறது.

ஐரோப்பிய நாடுகளில் தொலைக்காட்சியில் விளம்பரங்கள் ஒரு நிகழ்ச்சியின் இடையே குறுக்கிடுவதில்லை. நிகழ்ச்சி முடிந்த பிறகே விளம்பரங்கள் வரலாம். அதுவும் எத்தனை நிமிடங்கள் என்று ஒரு அளவு இருக்கிறது. ஆனால் இங்கே விளபரங்களுக்கு இடையில் தான் நிகழ்ச்சிகள் வர வேண்டிய அவலம். விளம்பரங்கள் என்பவை நமது வாழ்வையே ஒரு பண்டமாக மாற்றிவிட்டன.

தொலைக்காட்சி விளம்பரங்களே நுகர்பொருள் கலாச்சாரத்தைப் பரவலாக்குகின்றது. அதிலிருந்தே பெருமளவிலான உற்பத்தி என்பதும் உண்டாகிறது. அதன் மூலமாகவே பிரம்மாண்டமான கம்பெனிகள் உருவாகின்றன. அவை பொதுமக்கள் அனைவரையும் ஒரே விதமான பொருட்களை வாங்கும்படி விளம்பரங்கள் மூலமாக சொல்லிச் சொல்லி மூளைச் சலவை செய்துகொண்டிருக்கின்றன. பல கோடி ரூபாய்க்கு கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் அண்மையில் சென்னை நகரில் ஏலம் விடப்பட்டதுகூட இந்தப் பின்னணியில்தான். இவ்வாறாகவே, மக்கள் பன்னாட்டு நிறுவனங்களின் அடிமைகளாகி, தங்கள் தனித்தன்மையை இழந்து வருகின்றனர்.

நுகர்வுக் கலாச்சாரத்தைப் பற்றி ஆய்வு செய்யும் அறிஞர்கள் இதை Hypnopaedi என்று அழைக்கிறார்கள். இதன் பொருள் என்னவென்றால், மனிதனின் தனித்தன்மையை முற்றாக அழித்து,

https://telegram.me/aedahamlibrary

எல்லோரையும் மந்தைக் கூட்டத்தைப் போல் ஒன்று போலவே நடந்து கொள்ளவும், சிந்திக்கவும் செய்வது. இதைத்தான் இன்றைய அமெரிக்கக் கலாச்சாரம் செய்துகொண்டிருக்கிறது. கீழை தேசங்களின் கலாச்சாரம் இதற்கு நேர்மாறானது. அது மௌனத்தின் மூலமாகவே தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

# மும்பையின் மீது போர்

125 பேர்களுக்கு மேல் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 400 பேருக்கு மேல் படுகாயம் அடைந்திருக்கிறார்கள். மும்பை நகரத்தின் மீது அறிவிக்கப்படாத போர் ஒன்று தொடுக்கப்பட்டிருக்கிறது. மக்கள் கனவிலும் எதிர்பார்த்திராத அளவுக்கு அழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் போர். அரசியல்வாதிகளால் தொடர்ந்து ஏமாற்றப்பட்டு வரும் முட்டாள் ஜனங்களாகிய நாம் இதுவரை குண்டு வெடிப்புகளை மட்டுமே கண்டு வந்திருக்கிறோம். அப்படிப்பட்ட நமக்கு இது ஒரு புதிய பயங்கரமான அனுபவம். பத்து இருபது பயங்கரவாதிகள் அரபிக் கடல் வழியாக சில படகுகளின் மூலம் மும்பை வந்து இறங்கி இந்தியா கேட் வழியாக நகரில் புகுந்து இந்தியாவின் வியாபாரத் தலைநகரைத் தாக்கியிருக்கிறார்கள். அதற்குத் தேவையான வெடிகுண்டுகள், துப்பாக்கிகள் போன்ற எல்லா மனித அழிவுக் கருவிகளையும் எடுத்து வந்திருக்கிறார்கள். தனித்தனி குழுவாகப் பிரிந்து மும்பை நகரின் முக்கிய இடங்களில் தங்களை நிலைநிறுத்திக் கொண்டு மக்களையும், போலீஸையும் சுட்டுக் கொன்று கொண்டிருக்கிறார்கள். ரயில் நிலையத்திலும், ஷாப்பிங் மால்களிலும், நட்சத்திர ஓட்டல்களிலும் இந்த பயங்கரத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள். ஓட்டலில் தங்கியிருந்த மக்களையும் பிணைக் கைதிகளாகப் பிடித்து வைத்துள்ளனர். பிணைக்கைதிகளில் சிலர் காப்பாற்றப்பட்டுள்ளனர். பலர் இன்னும் பயங்கரவாதிகளின் பிடியிலேயே இருக்கிறார்கள்.

வழக்கமாக மக்கள் கூடியிருக்கும் இடங்களில் வெடிக்கும் வெடி குண்டுகள் இல்லை. ஏகே 47 ஏந்திய சில பயங்கரவாதிகள் நம் கண்ணெதிரே நிராயுதபாணியான மக்களை சுட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தியா மட்டுமல்லாமல் உலகமே தொலைக்காட்சி வழியாக இதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

போர் என்பதற்குப் பாரம்பரியமாக இருந்து வந்த அர்த்தம் இப்போது மாறிவிட்டது. போர் என்பது இதுவரை தேசங்களின் எல்லைப் புறங்களில் இரண்டு ராணுவங்களுக்கு இடையே நடப்பதாக இருந்தது. ஆனால் இப்போது டாங்கிகளோ இன்னபிற ராணுவத் தளவாடங்களோ இல்லாமல் வெறும் பத்து இருபது பயங்கரவாதிகள் தற்கொலைப் படையாக மாறி ஒரு கோடி மக்கள் வசிக்கும் ஒரு நகருக்குள் நுழைந்து

https://telegram.me/aedahamlibrary

அந்த நகரில் வசிக்கும் அப்பாவி மக்களைக் கண்மண் தெரியாமல் சுட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கெரில்லா யுத்தம். இந்த கெரில்லா யுத்தத்தை எப்படி எதிர்-கொள்வது என்று போலீசுக்கோ ராணுவத்துக்கோ தெரியவில்லை. மும்பைக்குள் நுழைந்த பயங்கரவாதிகள் வெகு சாவகாசமாக நடந்து சென்று தாஜ் ஓட்டலுக்குள் புகுந்து அங்கு தங்யிருந்தவர்களை பிணையக் கைதிகளாக்கியுள்ளனர். ஒரு கோடி மக்கள் தொகையைக் கொண்ட ஒரு நகரம் இந்த அளவுக்கா தற்காப்புத் திறன் இல்லாமல் இருக்கும் என்று தேசமே அதிர்ச்சியில் உறைந்திருக்கிறது. இந்த தேசத்துக்கென்று அரசாங்கமோ ராணுவமோ போலிசோ இல்லையா? நாம் என்ன காட்டுமிராண்டி சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோமா?

எந்த நேரத்தில் இந்தத் தாக்குதல் நடந்திருக்கிறது என்று கவனியுங்கள். இஸ்லாமுக்கும், இஸ்லாமியர்களுக்கும் எதிராக நடந்து வரும் அமெரிக்காவுக்கு பயங்கரவாதிகள் தங்களுடைய பலத்தைக் காண்பிப்பதற்காக இந்தியர்களை சோதனை எலிகளைப் போல் பயன்படுத்தியிருக்கிறார்கள். மும்பையின் மீது நடந்துகொண்டிருக்கும் இந்தத் தாக்குதலை அமெரிக்கர்கள் இப்போது தங்கள் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஈராக்கின் மீதும், ஆஃப்கானிஸ்தான் மீதும் அமெரிக்கா நடத்திய ராணுவத் தாக்குதலுக்கு இந்திய மக்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றனர்.

அமெரிக்காவும் பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஆளாகியிருக்கிறது என்றாலும் இவ்வளவு கேவலமாகவும் அபத்தமாகவும் அல்ல. அரபிக்கடலில் ரோந்து செய்து கொண்டிருக்கும் இந்தியக் கடற்படை என்ன செய்துகொண்டிருந்தது? இந்தியாவின் ஒவ்வொரு நகரிலும் தொடர்ந்து நடைபெறும் குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்குப் பிறகும் அதிலிருந்து இந்திய அரசியல்வாதிகள் எதையும் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. அவர்களால் கற்க முடியவில்லை என்று அர்த்தம் அல்ல; அவர்களுக்குக் கற்க விருப்பமில்லை. ஏனென்றால் அவர்களுடைய ஒரே குறி எப்போதும் அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்பதுதானே தவிர மக்கள் நலன் அல்ல. காங்கிரஸ் பதவியில் இருந்தால் பி.ஜே.பி.யின் ஒரே கவலை வருகின்ற தேர்தலில் எப்படி ஆட்சியைப் பிடிப்பது. அதேபோல் இப்போது ஆட்சியில் இருக்கும் காங்கிரஸின் கவலையும் ஒரே ஒரு விஷயத்தைப் பற்றித்தான். அது, நல்ல அரசை எப்படித் தருவது என்பதல்ல; வரும் தேர்தலில் எதிர்க்கட்சியைத் தோற்கடித்து எப்படி மீண்டும் தாமே ஆட்சியில் அமர்வது என்பதுதான். மற்றபடி இந்த இரண்டு கட்சிகளுக்குமே எப்போதும் தேசத்தைப் பற்றியோ, மக்களைப்

https://telegram.me/aedahamlibrary

பற்றியோ, அவர்களது நலனிலோ அக்கறையே இருந்ததில்லை. அதிகாரத்துக்கு அடுத்தபடியாக அவர்கள் அக்கறை கொள்ளும் ஒரே விஷயம், மக்களை எப்படிக் கொள்ளை அடிப்பது என்பதுதான்.

'நாம் எப்போதுமே பயங்கரவாதத்துக்கு அடிபணிய மாட்டோம்' என்ற வழக்கமான பல்லவியைப் பாடியிருக்கிறார் பிரதம மந்திரி. துணிவு, வீரம் போன்ற துக்கடாக்களும் உண்டு. ஆனால் இந்தப் பேச்சு அத்தனையும் ஒவ்வொரு குண்டு வெடிப்புக்குப் பிறகும் - ஒவ்வொரு குண்டு வெடிப்பிலும் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் உடல் சிதறிச் செத்த பிறகும் அவர் பேசி வந்த அதே வார்த்தைகள்தான். ஒரு வார்த்தைகூட புதிய வார்த்தை அல்ல. ஆனால் பயங்கரவாதிகளின் தாக்குதல் ஒரே மாதிரியாக இல்லை. இந்த முறை அது வித்தியாசமாக உள்ளது. எங்கோ ஒரு மார்க்கெட்டிலோ சினிமா தியேட்டரிலோ ஷாப்பிங் மாலிலோ வெடிகுண்டை வைத்து விட்டுச் சென்று விடவில்லை. மறைந்திருந்து தாக்கவில்லை. மிக வெளிப்படையாக வந்து ஒரு நகரத்தின் தெருக்களில் நின்று சண்டையிட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது தாக்குதல் அல்ல; போர். ஆனால் நம்முடைய பிரதம மந்திரி கூறுகிறார், நாம் பயங்கரவாதத்துக்கு அடிபணிய மாட்டோம் என்று. அவருடைய வார்த்தைகளின் அர்த்தம் என்ன?

பயங்கரவாதிகள் நம்முடைய அரசியல்வாதிகளை விடத் தங்கள் நோக்கத்தில் தெளிவாகவும் நேர்மையாகவும் இருக்கின்றனர். அவர்களிடம் ஊழல் இல்லை. தங்கள் குறிக்கோளுக்காகத் தங்கள் உயிரையும் விடத் தயாராக இருக்கின்றனர். அவர்கள் ஒரு தற்கொலைப் படையாக வந்திருக்கின்றனர். எப்படி இந்தப் பத்து இருபது தற்கொலைப் படைவீரர்களை எதிர்கொள்வது? மன்மோகன் சிங்குகளும் அத்வானிகளும் என்ன திட்டம் வைத்திருக்கின்றனர்? பயங்கரவாதத்திற்கு அடிபணிய மாட்டோம் என்றால் அதன் அர்த்தம் என்ன? பயங்கரவாதிகள் பொதுமக்களை சுட்டுக் கொன்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் பிரதம மந்திரியோ ஒரு பஃபூனைப் போல் பேசிக் கொண்டிருக்கிறார்.

இந்திய மக்கள் இன்று அனுபவித்து வரும் கொடுமைகளுக்குக் காரணம் இந்த ஆட்கள்தான். இந்த மன்மோகன் சிங்குகளும் அத்வானிகளும்தான் இந்தியாவின் இன்றைய நிலைக்குக் காரணம்.

இது இன்றைய துயர சம்பவத்தின் ஒரு பக்கக் கதை. அடுத்த பக்கம் என்ன என்று பார்க்கப் போனால் அது நம்மை காஷ்மீரத்துக்கு இட்டுச் செல்லும்.

https://telegram.me/aedahamlibrary

(இக்கட்டுரை மும்பையில் தாக்குதல் நடந்துகொண்டிருந்தபோது 28.11.2008 அன்று கலா கௌமுதி இதழுக்காக எழுதப்பட்டது)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

# ‘பொய்’சத்தியமும் இந்தியப் பொருளாதாரமும்

கடந்த பத்தாண்டுகளாக இந்தியாவில் நடந்து வரும் சமூக மாறுதல்களை உற்று கவனித்து வரும் ஒருவருக்கு, இந்த நாடு ஒருவிதமான ஆன்மீக வறுமையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இந்தியச் சமூகம் எந்த உயர்ந்த மதிப்பீடுகளும் அற்ற ஒரு மேம்போக்கான வாழ்க்கை முறையைத் தேர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறது; இதன் காரணமாக தற்கொலைகள் அதிகரித்திருக்கின்றன. இன்று (16.1.2009) கூட சென்னையில் ஐ.டி. நிறுவனத்தில் பணிபுரியும் ஒரு இளைஞர் தற்கொலை செய்துகொண்டிருக்கிறார். அமெரிக்காவில் சத்யம் நிறுவனத்தில் பணிபுரியும் ஒரு இந்திய இளைஞர் ஒரு கறுப்பின மனிதரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

தற்கொலைக்குக் காரணம், இளைஞர்களுக்குத் தங்களின் ஆடம்பர வாழ்விலிருந்து ஒரு சிறிதளவு சறுக்கல் ஏற்பட்டால்கூட அதைத் தாங்கிக்கொள்ளும் மனோபலம் இல்லாமல் போய்விட்டதுதான். என்ன செய்வதன்றே தெரியாமல் தற்கொலைக்குத் துணிந்து விடுகிறார்கள். எளிமையான வாழ்க்கை முறை என்பதே மக்களின் ஞாபகத்திலிருந்து மறக்கடிக்கப்பட்டுவிட்டது.

சமீப ஆண்டுகளில் நடந்த திடீர் தகவல்துறைப் புரட்சியின் காரணமாக மனித உறவுகள் முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு இன்று சிக்கலாகிவிட்டது. ஒருவரை ஒருவர் நேரில் சந்திக்காமலேயே ஒரு பெண்ணும் ஆணும் கணிப்பொறி மூலமே அறிமுகமாகி, அதன் மூலமே பலமணி நேரம் ‘சேட்’ செய்து, அதிலுள்ள புகைப்படக் கருவி மூலமே ஒருவரை ஒருவர் நிழல் உருவங்களாகப் பார்த்து மகிழ்ந்து, திருமணம்கூட செய்துகொள்ளும் விபரீதமெல்லாம் நடந்து

https://telegram.me/aedahamlibrary

கொண்டிருக்கிறது!

மக்களிடையே சகிப்புத்தன்மை என்பது மறைந்து போனதால் மனநோய் முன்பைவிடப் பல மடங்கு அதிகமாகி இருக்கிறது. திடீரென்று மனநோய் மருத்துவர்களுக்கு மவுசு கூடியிருக்கிறது. இரவில் வேலை செய்து பகலில் உறங்கும் புதிய பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. காரணம், இவர்கள் பணிபுரிவது அமெரிக்க வாடிக்கையாளர்களுக்காக. இந்தியாவின் இரவு அமெரிக்காவின் பகல் என்பதால் இந்திய இளைஞர்கள் அதற்கேற்பத் தங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக்கொண்டு விட்டார்கள். இப்படி இந்திய சமூகம் சந்தித்துக்கொண்டிருக்கும் விபரீதங்களைப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

இதற்கான காரணங்களில் ஒன்று, திடீரென்று வளர்ச்சியடைந்த தகவல் தொழில்நுட்பத் துறை. தேகத்தின் எல்லா பாகங்களும் போதுமான போஷாக்கின்றி சூம்பிக்கொண்டிருக்கும் போது வயிறு மட்டும் உப்பிக்கொண்டே போனால் என்ன ஆகும்? வெடித்துவிடும். அதுதான் இப்போது ‘சத்யம்’ நிறுவனம் மூலம் நடந்துள்ளது. இன்றும் நமது கிராமத்தில் ஒரு ஆசிரியருக்குச் சம்பளம் 2000 ரூ. நகரத்தில் ஒரு கால்செண்டரில் அல்லது ஐ.டி. நிறுவனத்தில் பணிபுரியும் ஒருவருக்குச் சம்பளம் ஒரு லட்சம். எப்படி உருப்படும் இந்த நாடு?

இன்றும் தபால் நிலையத்தில் ஈடி. என்று சுருக்கமாக அழைக்கப்படும் எக்ஸ்ட்ரா டிபார்ட்மெண்ட் போஸ்ட்மேனின் சம்பளம் என்ன தெரியுமா? 2000 ரூ. வேலை உத்தரவாதமும் கிடையாது. ‘வீட்டுக்குப் போ’ என்றால் அந்த நிமிடமே போய்விட வேண்டும்.

ஆனால் இந்தியாவின் ஐ.டி. தொழில் வளர்ச்சியைப் பார்த்து நாடே வியந்தது. இந்தியாவின் உள்நாட்டு நிலவரம் தெரியாமல் உலகமும் வியப்படைந்தது. என்னென்னவோ சொன்னார்கள். இன்னும் பத்தாண்டுகளில் இந்தியா சூப்பர் பவராக உயர்ந்துவிடுமாக்கும் என்றெல்லாம் ஜனாதிபதி முதல் கடைக்கோடி குடிமகன் வரை எல்லோரும் சொல்லிக்கொண்டிருந்தார்கள். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஒரு சீரிய சமுதாயத்தை உருவாக்கக்கூடிய பாடத் திட்டங்கள் புறக்கணிக்கப்பட்டு, 30 தினங்களில் உருவாக்கப்படும் ப்ராய்லர் கோழிகளைப் போன்ற செயற்கையான இளைய சமுதாயம் ஒன்று ‘தயாரிக்கப்’பட்டது.

ஒரு விழாவில் இன்ஃபோசிஸ் ஊழியர்கள் யாரும் தேசிய கீதம் பாடவில்லை என்ற பிரச்சினை வந்தபோது அந்த நிறுவனத் தலைவர்

https://telegram.me/aedahamlibrary

ஒரு மன்னிப்புகூட கேட்காமல், ‘எங்கள் ஊழியர்களுக்கு தேசிய கீதம் தெரியாது’ என்று பெருமிதம் பொங்க அறிவித்தார்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் சத்யம் நிறுவனம் உலகின் பெரிய ஐ.டி. நிறுவனங்களில் ஒன்றாகத் தெரிய ஆரம்பித்தது. அதன் தலைவரான ராமலிங்க ராஜு ஒரு மகா மனிதராகக் கருதப்பட்டார், உலகிலேயே ஐ.டி. துறையின் கோட்டைகளில் ஒன்றாகக் கருதப்பட்டது ஹைதராபாத். அப்போதய ஆந்திர முதலமைச்சரான சந்திரபாபு நாயுடுவே ராமலிங்க ராஜுவைப் பார்க்க வேண்டுமானால் முன் கூட்டியே அனுமதி பெற்றிருந்தால்தான் முடியும்.

மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் தலைவரும், அமெரிக்கக் கோடிஸ்வரருமான பில் கேட்ஸிலிருந்து, முன்னாள் அமெரிக்க அதிபர் பில் க்ளிண்டன் வரை ஹைதராபாத் வந்து ராமலிங்க ராஜுவைச் சந்தித்து அவருடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். ஆனால் அதே காலகட்டத்தில்தான் ஆந்திரப் பிரதேசத்தில் வறுமையினால் நூற்றுக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருந்தார்கள். அந்தக் காரணத்தினாலேயே அப்போதய தேர்தலில் சந்திரபாபு நாயுடு தோல்வியைத் தழுவ நேர்ந்தது. ஆனாலும் அந்தத் தோல்வியினால் ஆட்சியாளர்களும், ஐ.டி. அதிபர்களும் அந்தத் தொழிலைச் சார்ந்திருந்தவர்களும் எந்தப் பாடமும் கற்றுக்கொள்ளவில்லை.

உதாரணமாக, பில் க்ளிண்டன் ராமலிங்க ராஜுவிடம் “எப்படி நீங்கள் இதைச் சாதித்தீர்கள்? இதுவே எங்கள் நாடாக இருந்தால் உங்களையும், என்னையும் சேர்த்து ஜெயிலில் போட்டிருப்பார்கள்!” என்று கேட்டிருக்கிறார். இந்தக் கேள்வி முக்கியமானது. இதுதான் இந்தியச் சமூகம், அரசியல் போன்ற துறைகளின் குணாம்சத்தைக் குறிக்கின்ற கேள்வி. இந்த நாட்டில் நூறு ரூபாய் பிக் பாக்கட் அடிப்பவனுக்கு ஒரு ஆண்டு சிறைத்தண்டனை கிடைக்கும். அல்லது, பஸ்ஸில் பயணச்சீட்டு வாங்காமல் செல்லும் ஒருவரை பரிசோதகர்கள் பாய்ந்து பாய்ந்து பிடிக்கும் பாங்கை எப்போதாவது கவனித்திருக்கிறீர்களா? ஏதோ பயங்கரவாதியைப் பிடிப்பது போல் பிடிப்பார்கள். ஐந்து ரூபாய் பயணச்சீட்டு வாங்காமல் பயணம் செய்தால் அது இங்கே கொடூரமான குற்றம். ஆனால் மக்கள் பணமான நூறு கோடி ரூபாயைக் கையாடல் செய்தால் ஜாமீனில் வெளியே வந்துவிடலாம். இதுதான் இந்தியச் சமூகத்தின் குணாம்சம்.

மேலும், அரசுத் துறையென்றால் அது வீண்; தனியார் துறைதான் சிறப்பாக இயங்கும் என்பதாக இந்தியர்களிடையே நீண்டகாலமாக ஒரு

https://telegram.me/aedahamlibrary

மனோபாவம் நிலவுகிறது. என்னுடைய எளிமையான கேள்வி என்னவென்றால், தனியார் துறைக்கு மட்டும் வேறு ஏதாவது ஒரு கிரகத்தில் பயிற்சி பெற்றுக் கொண்டா வேலை செய்ய வருகிறார்கள்? அங்கே வேலை செய்பவர்களும் அரசுத் துறையில் பணியாற்றும் அதே இந்தியர்கள்தானே? தனியார் துறைக்குச் சென்றுவிட்டால் மட்டும் அவர்கள் எப்படி விசேஷத் தேர்ச்சி பெற்றவர்களாகிவிட முடியும்?

சத்யம் நிறுவனம் தனியார் துறைதான். அதன் தலைவர் ராமலிங்க ராஜு அதில் செய்திருக்கும் மோசடி 7000 கோடி ரூபாய். இதற்காக அவருக்கு என்ன தண்டனை கொடுத்துவிடப் போகிறார்கள்? மேலும், இவ்வளவு பெரிய மோசடியை ராமலிங்க ராஜு என்ற ஒருவர் மட்டுமே செய்திருக்க முடியுமா? தணிக்கைத் துறை வல்லுநர்கள் போன்றவர்களெல்லாம் இல்லையா? ஆக, நடந்திருப்பது எல்லாமே ஒரு கூட்டு மோசடி.

நான் இங்கே அரசு நிறுவனங்களை ஆதரித்துப் பேச விரும்பவில்லை. அரசுத் துறையோ, தனியார் துறையோ அது எதுவாக இருந்தாலும் மக்களின் மதிப்பீடுகள் உயர்வாகவும், அவர்களின் அணுகுமுறை நேர்மையாகவும் இருந்தால்தான் ஒரு சமூகம் முன்னேற முடியும்.

சில ஆண்டுகளுக்கு முன்பு பாரிஸ் நகரின் காய்கறி அங்காடி ஒன்றில் என் ஃப்ரெஞ்ச் நண்பருடன் சென்றுகொண்டிருந்தேன். அது தமிழர்கள் அதிகம் வாழும் பகுதி. நம் ஊரில் கிடைக்கும் அனைத்து காய்கறிகளும் அங்கே விற்பனைக்கு இருந்தன. “தமிழ்-நாட்டிலிருந்து வருகிறதா?” என்று கேட்டேன். அதற்கு அவர் சொன்ன பதில் அதிர்ச்சியாக இருந்தது. ஃப்ரெஞ்சுக்காரர்களுக்கு மாம்பழம் பிடிக்கும் என்பதால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்தார்களாம். அப்போது பார்சலின் மேல் பகுதியில் மாம்பழங்களும் அதற்கு உள்ளே வெறும் இலைதழைகளும் சென்றதாம். ஒரு முறை, இருமுறை அல்ல; பல முறை அப்படி நடந்ததும் அவர்கள் இப்போது மொராக்கோவிலிருந்து மாம்பழங்களையும், மற்ற காய்கறிகளையும் வாங்கிக் கொள்கிறார்கள். அந்தக் காய்கறிகளைத்தான் நான் பார்த்தது.

ராமலிங்க ராஜு செய்த மோசடியால் உலகம் முழுவதும் இந்தியாவின் பெயர் கெட்டுப் போய் விட்டது.

இதை மாற்ற வேண்டுமானால் நமது அணுகுமுறையும், மதிப்பீடுகளும் மாற வேண்டும். ஐந்து ரூபாய்க்கு பஸ் டிக்கட் எடுக்காதவனுக்கு என்ன தண்டனை கிடைக்கிறதோ அதைவிடப் பலமடங்கு தண்டனை 5000 கோடி ரூபாய் ஊழல் செய்தவனுக்குக் கிடைக்க வேண்டும். மற்றும், பணம் ஒன்றே குறி என்ற பார்வை மாற வேண்டும். இதெல்லாம்

https://telegram.me/aedahamlibrary

எப்போது நடக்கிறதோ அப்போதுதான் இந்தியா முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பதாகச் சொல்ல முடியும்.

16.01.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

# கலாச்சார தாலிபான்கள்

துவஜம் நான். தலைவி நான். மகா சக்தி நான். ஜெயம் நான். என் புருஷன் எனக்குப் பணிந்து என்னிஷ்டம் போல் நடப்பான்.

*ரிக் வேதம் : பத்தாவது மண்டலம்: 159ஆம் அத்தியாயத்தில்*

*ரிஷி சசி பௌலோமி, சசியை நோக்கிக் கூறுவது.*

மங்களூரில் ஒரு 'பப்'பில் குடித்துக் கொண்டிருந்த பெண்களை ராம் சேனா என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் அந்த பப்பின் உள்ளே புகுந்து தாக்கியிருக்கிறார்கள். பெண்கள் குடிப்பது இந்திய மரபுக்கு எதிரானது என்பது இவர்கள் வாதம். பெண்களைத் தாக்கும் காட்டுமிராண்டிகளுக்கு இந்திய மரபையும், மாண்பையும் பற்றிப் பேசுவதற்கு என்ன அருகதை இருக்கிறது?

யாரும் பப்புக்குப் போகக் கூடாது என்றால் இந்தியாவில் ஏன் பப்புகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன? பெண்கள் மட்டும் பப்புக்குப் போகக் கூடாது என்றால் அரசியல் நிர்ணயச் சட்டத்தில் ஆணும், பெண்ணும் சமம் என்று ஏன் சொல்லப்பட்டுள்ளது? சமூகத்தில் ஒருசில இடங்களுக்குப் பெண்கள் செல்ல அனுமதி இல்லை என்று அ.நி.ச.வை மாற்ற வேண்டியதுதானே? காஷ்மீரிலும், வேறு சில இடங்களிலும் பெண்கள் பள்ளிக்குச் சென்றால் அவர்கள் முகத்தில் அமிலத்தை வீசுகிறார்கள் மதத் தீவிரவாதிகள். அதைப் போல் இந்தியா முழுவதையும் ஒரு மதத் தீவிரவாத நாடு என்று வெளிப்படையாக அறிவிப்பதற்கென்ன? ஏன் இப்படி ஜனநாயக நாடு என்று மாய்மாலம் செய்கிறார்கள்?

இந்தியா இன்னும் நவீன காலகட்டத்துக்குள்ளேயே நுழையவில்லை; இன்னும் மத்திய காலகட்டத்தின் சமூகச் சூழலே இங்கு நிலவுகிறது என்பதையே இதுபோன்ற சம்பவங்கள் நிரூபிக்கின்றன. மதம், மொழி, கலாச்சாரம் போன்ற விஷயங்களின் மீது தாங்கள் கொண்டுள்ள வெறித்தனமான நம்பிக்கைக்கு எதிரானவர்களையும், மாற்று நம்பிக்கை கொண்டவர்களையும் தாக்குவது இந்தியாவில் சமீக காலமாக அதிகரித்துவிட்டது. நிலைமை இப்படி இருக்கையில், இந்தியா இன்னும்

https://telegram.me/aedahamlibrary

சில ஆண்டுகளில் வல்லரசு ஆகி விடும் என்று சொல்பவர்கள் அயோக்கியர்கள் இல்லையா என்று கேட்கத் தோன்றுகிறது.

படுபயங்கரமான அந்த மங்களூர் பப் சம்பவத்துக்குப் பிறகு ராஜஸ்தான் மாநிலத்தின் முதல் மந்திரி, பெண்களுக்கு எதிரான குற்றச் செயல்கள் - அதிலும் குறிப்பாக, வன்கலவிக் குற்றம் --அதிகரித்திருப்பதற்குக் காரணம் குடிதான் என்றும், ராஜஸ்தான் மாநிலத்தில் நிலவும் பப் கலாச்சாரத்தை ஒழித்துக்கட்டுவதுதான் தன்னுடைய முதல் வேலை என்றும் கூறியிருக்கிறார். "இளைஞர்கள் தோளோடு தோள் சேர்த்துக்கொண்டு மால்களிலும் பப்களிலும் அலைவது ராஜஸ்தானின் கலாச்சாரம் அல்ல" என்கிறார் அவர்.

இந்தியாவில் சில மாநிலங்கள் இன்னமும் 18ஆம் நூற்றாண்டையே வந்தடையவில்லை என்பது அந்த மாநிலங்களின் கிராமப்புறங்களுக்குச் சென்று வந்தவர்களுக்குத் தெரிந்திருக்கும். அந்த இடங்களில் மிக மோசமான நிலப்பிரபுத்துவ மதிப்பீடுகளும், பெண்கள் இன்னமும் அடிமைகளாகவே நடத்தப்படும் கொடூரமான சூழலும் நிலவுகின்றன. இதைத்தான் ராஜஸ்தானின் மன்னர் - ஸாரி, முதல் மந்திரி - ராஜஸ்தானின் கலாச்சாரம் என்று கூறுகிறார் போலும்!

இந்தியாவில் நடப்பது ஜனநாயகம் அல்ல; மன்னராட்சியின் வேறோர் வடிவமே இது என்பது இந்த சமூக நிலையைக் கூர்ந்து கவனிப்பவர்களுக்குத் தெரியும். மன்னராட்சிக்கும் இந்தப் போலி ஜனநாயகத்துக்கும் உள்ள ஒரே வித்தியாசம், மன்னராட்சியில் குறைந்த பட்சம் இருபது முப்பது ஆண்டுகள் நாட்டில் ஒரே மன்னனின் சர்வாதிகாரம் நடக்கும்; பிறகு அந்த மன்னனைக் கொன்றுவிட்டோ அல்லது அவனது இயற்கை மரணத்துக்குப் பிறகோ அவனுடைய வாரிசு ஆட்சிக்கு வருவான். அல்லது, வேறு தேசத்து மன்னன் இவனைப் போரில் வென்று தன்னுடைய ஆட்சியை நிலை நாட்டுவான். இந்தியாவில் இந்த ஆட்சி மாற்றம் என்பது ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வரும் தேர்தல் என்ற தமாஷான, அதே சமயம் படு பயங்கரமான ஒரு அபத்த நாடகத்தின் மூலமாக நடந்து வருகிறது.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒரு அரசியல் கட்சி இந்தியாவைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, மக்கள் பணத்தை அந்தக் கட்சிக்காரர்கள் சூறையாடுவார்கள். பிறகு, அடுத்த தேர்தலில் இதுவரை எதிர்க்கட்சியாக இருந்த கட்சி ஆட்சிக்கு வந்து அந்தக் கட்சியின் ஆட்கள் மக்கள் பணத்தைக் கொள்ளையடிப்பார்கள். இதுதான் இந்தியாவில் ஜனநாயகம் என்ற பெயரில் கடந்த 50 ஆண்டுகளாக நடந்து வருகிறது. இது இந்த தேசத்தில் உள்ள எல்லோருக்குமே

https://telegram.me/aedahamlibrary

தெரியும் என்றாலும் யாரும் வெளிப்படையாக ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

இது ஒருபுறம் இருக்க, மன்னராட்சியில் மன்னன் எந்த மதத்தைச் சேர்ந்தவனாக இருக்கிறானோ அந்த மதத்தையே மக்களும் பின்பற்றியாக வேண்டும். அவன் எந்த மதத்துக்கு மாறுகிறானோ அந்த மதத்துக்கே மக்களும் மாறியாக வேண்டும். இதைப் போலவேதான் இப்போதும் இந்தியாவில் நடந்துகொண்டிருக்கிறது.

மங்களூர் பப் சம்பவம் நடந்த பிறகு கர்னாடக முதல் மந்திரியும் ராஜஸ்தானின் முதல் மந்திரி மாதிரியே பேசியிருக்கிறார். பப்பில் பெண்கள் மீது தாக்குதல் நடத்திய காட்டுமிராண்டிகளைப் பிடித்துக் கடும் நடவடிக்கை எடுக்காமல், பப் கலாச்சாரத்தை வளரவிடாமல் ஒடுக்கப் போவதாகக் கூறியிருக்கிறார் எடியூரப்பா. பப் கலாச்சாரம் என்ற அந்நிய கலாச்சாரம் இந்தியக் கலாச்-சாரத்துக்கு எதிரானதாம்.

அடுத்து, மத்திய சுகாதார மந்திரி அன்புமணியும் இதே ரீதியில் பேசியிருக்கிறார். பப்புகளை ஒழிக்க வேண்டும்; யாரும் மது அருந்தக் கூடாது; புகை பிடிக்கக் கூடாது. பதவி ஏற்றதிலிருந்து சொல்லி வந்ததையே இந்த சந்தர்ப்பத்திலும் சொல்கிறார் சுகாதார மந்திரி. நாட்டில் 40 சதவிகித சாலை விபத்துகள் மக்கள் மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதால்தான் நடக்கிறது; அதனால் யாரும் மது அருந்தக் கூடாது என்பது மந்திரியின் வாதம்.

அப்படியானால் இரவில் திருட்டு நடக்கிறது என்பதற்காக யாரும் இரவில் நடமாடக் கூடாது என்று சட்டம் கொண்டு வருவாரா மந்திரி? குடித்துவிட்டு வாகனம் ஓட்டினால் அதைப் பிடிக்க வேண்டியது போக்குவரத்துப் போலீசாரின் கடமை. ஆனால் முக்கால்வாசிப் போக்குவரத்துப் போலீசாருக்கு மந்திரிகளின் போக்குவரத்துக்காக சாலைகளில் மற்ற வாகனங்களை ஒழுங்குபடுத்துவதற்கும், மந்திரிகளுக்கு பந்தோபஸ்து கொடுப்பதற்குமே நேரம் போய்விடுகிறது. அதனால் குடித்து விட்டு வண்டி ஓட்டுபவர்களைப் பிடிக்க இங்கே யாரும் இல்லை. அப்படியே ஒன்றிரண்டு போலீஸ் அவர்களைப் பிடித்தாலும், நூறு இருநூறு என்று லஞ்சம் வாங்கிக்கொண்டு விட்டுவிடுகிறார்கள்.

இந்தியாவை விட ஐரோப்பாவில் குடிப்பவர்கள் அதிகம். ஆனால் அங்கே யாரும் குடித்துவிட்டு வண்டி ஓட்டுவதில்லை. அப்படியே ஓட்டினால் ஒரு தடவை எச்சரிக்கை நோட்டீஸ் கொடுப்பார்கள். அடுத்த முறையும் குடித்துவிட்டு ஓட்டினால் லைசன்ஸை ரத்து

https://telegram.me/aedahamlibrary

செய்துவிடுகிறார்கள். அதற்குப் பிறகு நான்கு ஆண்டுகளுக்கு லைசன்ஸ் கிடையாது.

ஆனால் அம்மாதிரி நடைமுறையை எல்லாம் இந்தியா போன்ற தேசத்தில் பின்பற்ற முடியாது. ஏனென்றால், அங்கே மக்கள் தங்கள் வீடுகளுக்கு இரவில் எந்த நேரத்திலும் போய்ச் சேர மெத்ரோ ரயில், பஸ் போன்ற வாகன வசதிகள் உண்டு. இங்கேயும் உண்டு என்று சொல்பவர்கள் முதலில் சென்னை, மும்பை போன்ற நகரங்களின் ரயில் மற்றும் பஸ்களில் பயணம் செய்து பார்த்து விட்டுப் பேச வேண்டும். ஹிட்லரின் வதைமுகாம்களுக்கு யூதர்களை லாரிகளில் அள்ளிப் போட்டுக் கொண்டு போவார்கள். அதைவிடக் கொடுமையானது இந்தியாவின் மாநகர பஸ் மற்றும் ரயில் போக்குவரத்து. இதில் ஏறினால் குடல் நசுங்கி வாய் வழியே வெளியே வந்து விடும்.

இதெல்லாம் ஒரு பக்கம் இருக்க, மங்களூர் பப்பில் பெண்களை அடித்து உதைத்த கலாச்சார ரௌடிகளின் மனோநிலையையே இந்தியாவின் பெரும்பான்மையான ஆண்களும், பெண்களும், ஆட்சியாளர்களும் வெளிப்படுத்துவதைக் காண்கிறோம். ஒரு காங்கிரஸ் முதல் மந்திரி (கர்னாடகா), ஒரு பி.ஜே.பி. முதல் மந்திரி (ராஜஸ்தான்), ஒரு பாட்டாளி மக்கள் கட்சி மந்திரி என்று எல்லோருமே ஒரே குரலில் பேசுவதைக் கவனியுங்கள். இவர்கள் யாருக்குமே மங்களூரில் நடந்த காட்டுமிராண்டித்தனத்தைப் பற்றி எந்தக் கவலையும் இல்லை; அவமானமும் இல்லை. மாறாக, பப்புகள் இருக்கக் கூடாது; யாரும் குடிக்கக் கூடாது; அதிலும் பெண்கள் குடிக்கவே கூடாது என்கிறார்கள். காங்கிரஸ், பா.ஜ.க., பா.ம.க. மட்டும் அல்ல; நக்ஸல்பாரி இயக்கத்தைச் சேர்ந்தவர்-களும், ராஜ் தாக்கரே போன்றவர்களும் கூட கலாச்சார விஷயத்-தில் ஒத்த கருத்துடையவர்களாகவே இருப்பதைக் கவனியுங்கள்.

சரி, இந்த கலாச்சார ஃபாஸிஸ்டுகளை விட்டு விடுவோம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதாகச் சொல்லப்படும் மந்திரிகளுக்கு, மக்களாகிய நாம் எதைக் குடிக்க வேண்டும், எதைக் குடிக்கக் கூடாது, எப்படி உடை உடுத்த வேண்டும், எப்படி உடுத்தக் கூடாது என்றெல்லாம் சொல்வதற்கும், ஆணையிடுவதற்கும் என்ன அதிகாரம் இருக்கிறது?

(இப்போது இந்த ராம சேனா அமைப்பு பெண்கள் நூடுல்ஸ் ஸ்ட்ராப் உடைகளை அணியக் கூடாது என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது).

மக்களுக்கு பாரதப் பண்பாடு பற்றி போதித்துக் கொண்டிருக்கும் இந்த அரசியல்வாதிகள் மங்களூர் பப்பில் பெண்களைத் தாக்கிய

https://telegram.me/aedahamlibrary

காட்டுமிராண்டிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் அந்த பப்புக்கு லைசன்ஸ் இருக்கிறதா, பப்புகளைத் தடை செய்யலாமா என்றெல்லாம் பேசி வருகின்றனர்; போலீஸ் நடவடிக்கையும் எடுத்து வருகின்றனர். உதாரணமாக, தில்லி மாநகரம்தான் இந்தியாவிலேயே பெண்களுக்குப் பாதுகாப்பற்றதாக இருக்கின்றது. சமீபத்தில்கூட தில்லிக்கு அருகில் உள்ள நோய்டாவில் தனது தோழனுடன் இருந்த ஒரு பெண்ணை கிரிக்கெட் விளையாடி விட்டுத் திரும்பிக்கொண்டிருந்த இளைஞர் குழு ஒன்று (மொத்தம் 12 பேர்) ஒருவர் பின் ஒருவராக வன்கலவி செய்திருக்கின்றனர். இப்படி தில்லி நகரம் பெண்களுக்கு பாதுகாப்பற்று இருப்பதால் அந்நகரத்தில் பெண்களே வெளியில் செல்லக் கூடாது என்று சட்டம் போடுவார்களா?

இந்தப் பிரச்சினையில் வேறோர் சதித் திட்டமும் இருக்கிறது. ஒரு அரசியல் கட்சி உருவாகி, மக்கள் மத்தியில் பரவலாக வெளியே தெரிய வருவதற்காக அக்கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் எத்தனையோ வேலைகளையும், தியாகங்களையும் செய்ய வேண்டியிருக்கிறது. உதாரணமாக, இதுவரை தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகமாக இருந்த அமைப்பு இப்போது ஒரு அரசியல் கட்சியாக மாறும் பொருட்டு மாநாடுகளை நடத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் இந்தியாவில் யாருக்குமே தெரிந்திராத ராமர் சேனை என்ற ஒரு அமைப்பு, பப்பில் போய் அங்கே குடித்துக்கொண்டிருந்த பெண்களைத் தாக்கியதன் மூலம் இன்று இந்தியா மட்டும் அல்லாமல் உலக அளவில் பிரபலமாகிவிட்டது. ஒரு ரவுடித்தனத்தைச் செய்வதன் மூலம் இப்படி இந்திய அளவில் பிரபலமாகி, அத்தனை செய்தி ஊடகங்களிலும் பிரதான இடம் பிடிக்க முடியும் என்றால் இந்த நாடு எவ்வளவு காட்டுமிராண்டித்தனமான நிலையில் இருக்கிறது என்று யூகித்துக் கொள்ளுங்கள்.

ஆனால், உண்மையில் இது ஒரு ஜனநாயக நாடாக இருந்தால், இந்த அளவுக்குப் பெண்களுக்கு எதிரான வன்முறையைக் கட்டவிழ்த்து விடும் ரவுடிகளும், ரவுடி அமைப்புகளும் பெண்களை வன்கலவி செய்யும் குற்றவாளிகளைப் போலவே கருதப்பட்டு ஆயுள் தண்டனை கொடுக்கப்பட்டிருப்பார்கள்.

இந்தப் பிரச்சினையோடு இணைத்துப் பார்க்க வேண்டிய ஒரு சம்பவம், தில்லியில் பொது இடத்தில் ஆபாசமாக நடந்து கொண்டதாக ஒரு தம்பதியினர் மீது இந்தியக் குற்றவியல் பிரிவு 294-இன் கீழ் போலீஸ் நடவடிக்கை எடுத்தது. அவர்கள் செய்த ஆபாசச் செயல் என்னவென்றால், அவர்கள் முத்தமிட்டுக்கொண்டனர் என்பதுதான். ஆனால் சமீபத்தில் தில்லி உயர்நீதி மன்றம் இவர்களை

https://telegram.me/aedahamlibrary

விடுவித்துவிட்டது ஒரு நற்செய்தியே எனினும், அதிகார அமைப்பு எந்த அளவுக்குக் கலாச்சாரப் பாதுகாவலர்களாக இருந்து தனிநபர் சுதந்திரத்தை ஒடுக்குகிறது என்பதற்கு இந்தச் சம்பவம் ஒரு எடுத்துக்காட்டு.

இப்போது காதலர் தினத்தன்று இளம் ஜோடிகள் தனிமையில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு அதே இடத்தில் கட்டாயத் திருமணம் செய்து வைக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளது ராம சேனா அமைப்பு.

“பெண்கள் ஏன் பப்புக்குப் போக வேண்டும்? அவர்கள் தங்களின் வருங்காலக் கணவர்களுக்கு மதுவையா ஊற்றிக் கொடுக்கப்போகிறார்கள்? இவர்களுக்கெல்லாம் சப்பாத்தி செய்யத் தெரியுமா? பார்களும் பப்களும் ஆண்களுக்கு மட்டுமே ஆனவை. இனிமேல் மங்களூரிலுள்ள எல்லாப் பெண்களும் இரவு ஏழு மணிக்குள் தங்கள் வீட்டுக்கு வந்துவிட வேண்டும். இல்லாவிட்டால் நடப்பதே வேறு.”

இப்படிச் சொல்லியிருப்பவர் ராம சேனா அமைப்பின் ப்ரவீன் வால்கே (வயது 40). இவர் பள்ளிப் படிப்பை பாதியிலேயே விட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. இம்மாதிரி கேடிகளின் சகாக்கள் தமிழ் நாட்டிலும் உள்ளனர்.

தமிழ்நாட்டிலும் பல இந்து முன்னணி அமைப்புகள் (ஒரு அமைப்பின் பெயர்: அனுமன் சேனா) கட்டாயத் திருமணத்திற்குத் தயாராகி வருகின்றன. அப்படியானால் எனக்கு ஒரு சந்தேகம். அந்த இளம் ஜோடிகள் அண்ணன் தங்கையாக இருந்தால் என்ன செய்யும் இந்த ராமர், அனுமன் சேனைகள்?

இந்தியா ஒரு ஃபாஸிஸ சமூகமாக மாறிக்கொண்டிருப்பதன் இந்த அறிகுறிகள் மிகவும் கவலை தருபவை.

02.03.2009

https://telegram.me/aedahamlibrary

# மதம் கொண்ட வேழம்

உயர்நீதிமன்ற வளாகத்தில் நடந்த வக்கீல் போலீஸ் மோதல் சம்பவம் பற்றிய என்னுடைய கட்டுரை நாளை வெளிவரும் என்று அந்தச் சம்பவம் நடந்த அன்று ஒரு வரிப் பதிவு ஒன்றைப் போட்டிருந்தேன். அதோடு விட்டிருந்தால் பரவாயில்லை. கருணாநிதி அரசை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்றும் கருத்துக் கூறியிருந்தேன்.

ஆனால் நான் சொல்லியபடி மறுநாளே அந்தக் கட்டுரையை எழுதிப் பதிவேற்றம் செய்யவில்லை. காரணம், சலிப்பு. பாதாள சாக்கடையில் உடைப்பு எடுத்து, அதை நீங்கள் மட்டுமே துப்புரவு செய்ய வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால் எப்படி இருக்கும்? அப்போது ஏற்படும் சலிப்பு உணர்வு மாதிரிதான் அது. அந்த நேரத்தில்தான் ரஹ்மானுக்கு இரட்டை ஆஸ்கர் என்ற செய்தி வந்ததும் அந்த வக்கீல் போலீஸ் மோதல் என்ற ஆபாச விஷயத்தைக் கை விட்டேன்.

ஆனால் பல அன்பர்கள் ‘என்ன பயந்துவிட்டீர்களா?’ என்றும், ‘வீட்டுக்கு ஆட்டோ வந்து விட்டதா?’ என்றும் பலவாறாக விசாரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். என்னுடைய எழுத்தைப் படிப்பவர்களுக்கு நான் அந்த மாதிரி ஆள் அல்ல என்று தெரிந்திருக்க வேண்டும்.

உயிரோசை இணைய இதழில் மாயா என்பவர் இவ்விஷயத்தைப் பற்றி நான் என்ன நினைக்கிறேனோ அதை அப்படியே எழுதியிருக்-கிறார். அக்கட்டுரையில் அவர் கூறுவது என்னவென்றால், இரண்டு ரவுடிகள் அடித்துக்கொண்டார்கள் என்பதுதான். இந்தியாவில் வக்கீல்களும், போலீசும் தங்களை சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்களாகக் கருதிக் கொள்கிறார்கள். இருவருக்குமே தாங்கள் மக்களுக்குப் பணியாற்றும் ஊழியர்கள் என்பது ஞாபகம் இல்லை. ஒரு பேட்டையில் இரண்டு தாதாக்களுக்கு இடையே என்ன நடக்குமோ அதுதான் அன்றைய தினம் உயர்நீதிமன்றத்தில் நடந்தது. நடந்தது ஒரு கேங்க் வார். மும்பை நகரில் முன்பு அருண் காவ்லி கோஷ்டிக்கும் தாவூத் இப்ராஹீம் கோஷ்டிக்கும் நடக்கும் மோதலைப் போன்றதுதான் உயர்நீதிமன்றத்தில் போலீஸுக்கும், வக்கீல்களுக்கும் நடந்த போர். அதைத் தவிர இதில் விவரித்துப் பேச எதுவுமே இல்லை.

வக்கீல்கள் மேல் போலீசுக்கு நீண்ட நாட்களாகவே பகை இருந்தது.

https://telegram.me/aedahamlibrary

அதை அன்றைய தினம் அவர்கள் தீர்த்துக்கொண்டார்கள். போலீஸ் துறை என்பது மக்களைக் காபந்து பண்ணும் ஒரு அரசுத் துறை என்பதெல்லாம் வெறும் ஏட்டுச் செய்தி என்பதையே அந்த நிகழ்ச்சி நமக்குக் காட்டியது. அவர்கள் ரவுடிகளைப் போல் உயர்நீதிமன்றத்தில் நின்றுகொண்டிருந்த கார்களையும், இரு சக்கர வாகனங்களையும் தங்கள் லத்திகளாலும் அங்கே குவித்து வைக்கப்பட்டிருந்த செங்கற்களாலும் தாக்கினார்கள். நீதிமன்றங்களில் ஒளிந்து கொண்டிருந்த பெண் ஊழியர்களையும் அடித்து நொறுக்கினார்கள். எப்போதும் போலீஸை காலித்தனமாகவும், ஆபாசமாகவும் திட்டிக்கொண்டிருக்கும் வக்கீல்கள் அன்றைய தினம் போலீஸின் வன்முறைத் தாக்குதலை நேரடியாக வாங்கிக்கொள்ள வேண்டிய பரிதாபகரமான நிலையில் இருந்தார்கள். ஐந்து மணிநேரம் நீடித்த இந்தப் போரில் நீதிபதி உட்பட உயர்நீதிமன்ற வளாகத்தில் இருந்த எல்லோரும் தாக்கப்பட்டனர்; பத்திரிகையாளர்களும் விதிவிலக்கு அல்ல.

சட்டக் கல்லூரியில் மாணவர்களுக்கு இடையே நடந்த கொலை வெறித் தாக்குதலின் போது "உயர் அதிகாரிகளிடமிருந்து எங்களுக்கு உத்தரவு வரவில்லை" என்று சொல்லி வேடிக்கை பார்த்த அதே போலீஸ்தான் அன்று நீதிமன்றத்துக்குள் புகுந்து எதிரில் தென்பட்ட எல்லோரையும் அடித்து நொறுக்கியது.

இந்த நாட்டில் யார் ஆட்சி செய்தாலும் போலீஸ் நினைத்தால் எதையும் செய்யலாம்; யாரை வேண்டுமானாலும் தாக்கலாம்; சுட்டுக் கொல்லலாம். பத்து ஆண்டுகளுக்கு முன்பு திருநெல்வேலியில் தலித்துகள் கூலி உயர்வு கேட்டு கலெக்டர் அலுவலகத்துக்கு ஊர்வலம் வந்தபோது அவர்களை அப்படியே தாமிரவருணி ஆற்றில் தூக்கிப் போட்டுக் கொலை செய்தவர்கள் இந்தப் போலீஸ்காரர்கள். நீந்தி வந்தவர்களையும் தடியால் அடித்து நதியில் மூழ்கடித்தார்கள். 17 தலித்துகள் இறந்தார்கள். அவர்களில் இரண்டு பெண்கள்; ஒரு குழந்தை அடக்கம். பிரிட்டிஷார் காலத்தில் ஜாலியன்வாலாபாதில் நடந்த அதே விதமான படுகொலைதான் அன்றைய தினம் திருநெல்வேலியில் தாமிரவருணி நதியில் நடந்தது.

அப்போது அதை யார் தட்டிக் கேட்டார்கள்? இப்போது அந்தப் போலீஸ், நீதித் துறையின் மீதே கை வைத்ததும் எல்லோருக்கும் அதிர்ச்சியாக இருக்கிறது. ஆனால் மக்களுக்கு இதில் அதிர்ச்சி எதுவும் இல்லை. ரவுடிகளின் சண்டையில் யார் பக்கம் இரக்கப்படுவது?

இந்த இரண்டு ரவுடிகளோடு கூட மூன்றாவது ரவுடி அரசியல்வாதி.

https://telegram.me/aedahamlibrary

சட்டக்கல்லூரி என்பதே அரசியல்வாதிகளை உருவாக்கும் பயிற்சிக்கூடமாக மாறி எவ்வளவோ காலம் ஆகிறது.

வக்கீல்களும், போலீஸும் ஐந்து மணி நேரமாக உயர்நீதி மன்றத்துக்குள் ஒரு போர்க்களத்தை நினைவுபடுத்துவதுபோல் மோதிக் கொண்டிருப்பதை அனுமதிக்கும் ஒரு ஆட்சி நீடிக்கப்-படலாமா என்பதே என்னுடைய கேள்வி. ஜெயலலிதா ஆட்சி வந்தால் அராஜகம் இதை விட அதிகமாக இருக்கும் என்பது தெரியும். ஆனால், அரசுக்கு எதிராக அரசு ஊழியர்கள் செயல்பட்டபோது இரண்டு லட்சம் அரசு ஊழியர்களை அவர் டிஸ்மிஸ் செய்தார் என்பதையும், அப்போது மக்கள் ஜெயலலிதாவின் செயலைப் பாராட்டினார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

உயர்நீதிமன்றத்தில் இப்படி வக்கீல்களுக்கும் போலீஸுக்கும் இடையில் போர் நடந்த மறுநாள், கண்ணதாசன் புத்தகங்களை அரசுடைமை ஆக்கியதற்கு காந்தி கண்ணதாசன் எதிர்ப்பு தெரிவித்ததற்காக வருத்தமுற்று கருணாநிதி காந்தி கண்ணதாசன் என்பவருக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருந்தார். இதுதான் ஒரு முதலமைச்சரின் நிர்வாக லட்சணம். பிறகு, வக்கீலுக்கும் போலீஸுக்கும் மோதல் போக்கு தொடருமானால் மருத்துவமனையிலேயே உண்ணாவிரதம் இருப்பேன் என்கிறார்.

இங்கே என்ன ஆட்சி நடக்கிறதா, அல்லது வேறு ஏதாவதா? இவ்வளவு பிரச்சினைக்கும் என்ன காரணம்? உயர்நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையிலேயே சுப்ரமணியம் சுவாமி மீது முட்டை வீசித் தாக்கினார்கள் சில வக்கீல்கள். பார்ப்பன நாய் என்று திட்டினார்கள். இவர்களைக் கைது செய்ய வந்தபோதுதான் போலீஸுக்கும் வக்கீல்களுக்கும் மோதல். அப்படியானால் ஒரு வக்கீல் சட்டத்தை மீறி நடந்தால் போலீஸால் அவரை எதுவுமே செய்ய முடியாது என்பதுதான் வக்கீல்கள் சொல்லும் செய்தி. இதையேதான் தாவூத் இப்ரஹீம் போன்றவர்களும், அரசியல்வாதிகளும் சொல்கிறார்கள். சாலைவிதிகளை மீறும் வக்கீல் மீது ஒரு போலீஸ்காரர் நடவடிக்கை எடுத்தாலும்கூட ஒட்டு மொத்த வக்கீல்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்பதுதான் இந்தியாவின் நடைமுறையாக உள்ளது.

போலீஸும் வக்கீல்களும் சமாதானமாகப் போக வேண்டும் என்பதற்காக உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்தார் தமிழ்நாட்டு முதலமைச்சர். இது எதைக் காட்டுகிறது? நிர்வாகம் அவர் கையை விட்டுப் போய்விட்டது என்பதைத்தானே?

https://telegram.me/aedahamlibrary

திவ்யப் பிரபந்தத்தில் என்றுதான் நினைக்கிறேன். அங்குசமும் மாவுத்தனும் இல்லாமல் மதம் கொண்ட வேழம் அலைகிறது என்று ஒரு பாடல் வரி வரும். இன்றைய தமிழகத்தின் நிலை அதைத்தான் நினைவுபடுத்துகிறது. (அது யார் பாடிய பாடல் என்று யாருக்காவது தெரிந்தால் சொல்லுங்கள்.)

01.03.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

# மதம் கொண்ட வேழம்: ஒரு தகவல்

பிச்சாவரம் கார்னிவலின் போது அங்கே வந்திருந்த சில நண்பர்களின் நண்பரான மோகன் மிஸோரத்திலிருந்து என்னிடம் சிறிது நேரம் பேசினார். அவர் எழுதியிருக்கும் தகவல் பின் வருவது.

மதம் கொண்ட வேழம் என்று தொடங்கும் பாடல் திவ்யப் பிரபந்தத்தில்தான் இருக்க வேண்டும் என்று எழுதியிருந்தேன். இல்லை. இந்தப் பாடல் ஆண்டாள் எழுதிய இரண்டு பாடல்களோடு சேர்ந்து மூன்றாவது பாடலாக ஹே ராம் படத்தில் வருகிறது. ஆண்டாள் எழுதியது "வாரணம் ஆயிரம் சூழ வலம் செய்து" மற்றும் "மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்று ஊத" என்று தொடங்கும் பாடல்கள். மூன்றாவது பாடல் "மதம் கொண்ட வேழம்." இதை எழுதியது ஞானக்கூத்தன்.

10.03.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

# தேர்தல் 2009 : மாஃபியாக்களின் குத்தகைத் திருவிழா

இந்திய அரசியல் பற்றி எழுதுவதுதான் ஒரு பத்திரிகை-யாளனுக்கோ, எழுத்தாளனுக்கோ விதிக்கப்பட்ட மிகச் சோர்வூட்டும் விஷயமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஒரு நதி சாக்கடையாக மாறினால் எப்படி இருக்குமோ அந்த அளவுக்கு இந்திய அரசியல் துர்நாற்றம் கொண்டதாக மாறிவிட்டது. இதை ஆரம்பித்து வைத்தவர் இந்திரா காந்தி. ஃபாசிசம், வாரிசு அரசியல், தார்மீக மதிப்பீடுகள் அற்ற செயல்பாடுகள் எல்லாவற்றுக்கும் அவரே துவக்கப்புள்ளியாக இருந்தார்.

பின்னர், காங்கிரசுக்கு மாற்றுத் தேடிய போது மக்களுக்குக் கிடைத்தது பி.ஜே.பி. 1998இலிருந்து 2004 வரை ஆட்சியிலிருந்த பி.ஜே.பி.யினால் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எந்தவித மாற்றமும் தெரியவில்லை. ‘இந்தியா ஒளிர்கிறது’ என்று பொய் சொன்னார்களே தவிர உண்மையில் எதுவுமே நடக்கவில்லை. மட்டுமல்லாமல் மக்களின் உயிருக்கே உத்தரவாதம் இல்லாமல் போய்விட்டது. ஒரு பக்கம் அரசு பயங்கரவாதம் (உதாரணம்: நரேந்திர மோடி: பார்க்கவும்: குஜராத் படுகொலை பற்றிய நேரடி சாட்சி: முன்னாள் குஜராத் டி.ஜி.பி. ஸி.நி. ஸ்ரீகுமாரின் பேட்டி: மலையாள மனோரமா: பெப்ருவரி 2008); மற்றொரு பக்கம், பயங்கரவாதிகளின் தாக்குதல்; மனித வெடிகுண்டுகள்; தற்கொலைத் தாக்குதல்கள்.

பி.ஜே.பி. ஆட்சிக்கு வந்த பிறகுதான் இந்தியா முழுவதும் பெண்களின் மீதான வன்முறையும் அதிகரித்தது. தாலிபான்கள் ஆஃப்கனில் செய்த அதே காரியத்தையே ‘இந்தியப் பண்பாடு’ என்று சொல்லிக் கொண்டு பி.ஜே.பியும், அதைச் சார்ந்த இந்துத்துவ சக்திகளும் இங்கே செய்யத் துவங்கின. இத்தகைய நிலையில் மக்களுக்குத் தேவையான மாற்றத்தைக் கொண்டுவரக்கூடியதாக ஒரு அரசியல் கட்சியும் தென்படவில்லை.

‘முன்பு வெள்ளைக்காரன் கொள்ளையடித்தான்; இப்போது இந்தியனே

https://telegram.me/aedahamlibrary

கொள்ளையடிக்கிறான்' என்ற நிலையில் வாழ வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள் இந்திய மக்கள். "குறைந்த பட்சம், வெள்ளைக்காரன் ஆட்சியில் நிர்வாக எந்திரமாவது கொஞ்சம் நன்றாக இருந்தது; இப்போது அதுவும் இல்லை" என்று நினைக்கும் அளவுக்கு இந்தியர்களின் வாழ்க்கை அவலம் நிறைந்ததாகி விட்டது.

மருத்துவம், கல்வி போன்ற மக்கள் நலத் துறைகள் பின்னுக்குத் தள்ளப்பட்டு அவற்றுக்கு ஒதுக்கப்படுவதை விடப் பல ஆயிரம் மடங்கு அதிகப் பணம் தேச பக்தி என்ற பெயரில் ராணுவத்துக்காக செலவிடப் படுகிறது. எது தேச பக்தி? பிக் பாக்கெட் அடித்துக் கொண்டிருந்தவனும், பேட்டை ரவுடியாக மாமூல் வசூலித்துக் கொண்டிருந்தவனும், தாதாக்களிடம் அடியாட்களாக இருந்தவனும் அரசியலில் நுழைந்து இன்று 1000 கோடிக்கும், 2000 கோடிக்கும் அதிபதியாக இருக்கிறார்கள். தேர்தலின் போது இவர்கள் காட்டும் சொத்துக் கணக்கே 30 கோடி, 40 கோடியைத் தாண்டுகிறது என்றால் இவ்வளவு பணமும் இவர்களுக்கு இவ்வளவு குறுகிய காலத்தில் எப்படி வந்தது? இவர்கள் குவித்து வைத்திருக்கும் கோடிக்கணக்கான பணமும் மக்களிடம் இவர்கள் கொள்ளையடித்ததல்லாமல் வேறு என்ன?

தொலைபேசி இலாகாவில் ஏதோ ஸ்பெக்ட்ரம் ஊழல் என்று பத்திரிகைகளில் படித்தோம். அரசுக்கு நட்டம் ஒரு லட்சம் கோடி என்கிறார்கள். (ஒரு லட்சம் கோடியில் எத்தனை பூஜ்யம் இருக்கிறது தெரியுமா?) இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு 3000 கோடி ரூபாய் லஞ்சம் கிடைத்ததாக எழுதிக்கொண்டிருக்கின்றன பத்திரிகைகள். 3000 கோடி! இதைப் பற்றி இன்னும் விரிவாக எழுதினால் என்னைப் போன்ற ஒரு எழுத்தாளனைக் கொன்றே போட்டுவிடுவார்கள். ஏனென்றால் வெறும் 3000 ரூபாயை பென்ஷனாகப் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கும் நான் ஒரு சாதாரண இந்தியப் பிரஜை!

மக்களின் பணத்தைக் கோடி கோடியாய் கொள்ளையடித்துக் கொண்டிருக்கும் இப்படிப்பட்ட கிரிமினல்கள்தான் நமக்கு தேச பக்தி பற்றிச் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் அடிக்கும் கூட்டுக் கொள்ளையினால்தான் இந்தியர்களின் ஆழ்மனதில் தேச பக்தி, தேசஉணர்வு போன்ற எண்ணங்களே இல்லாமல் அற்றுப் போய்விட்டன. 'மேலே இருப்பவன் கோடிக்கணக்கில் அடிக்கிறான்; நாம் லட்சக்கணக்கில் அடிப்போம்' என்பதே இன்றைய இந்தியனின் மனநிலையாக இருக்கிறது. சுருக்கமாகச் சொன்னால், 'எவ்வளவு முடிகிறதோ அவ்வளவு கொள்ளை அடி என்பதே ஒவ்வொரு இந்தியனும்

https://telegram.me/aedahamlibrary

தனது சக இந்தியனுக்குச் சொல்லும் செய்தி என்று சொல்லலாம். தாலுகா ஆஃபீஸ் பியூன், ட்ராஃபிக் போலீஸ், பத்து ரூபாய் தூரத்துக்கு 50 ரூபாய் வசூலிக்கும் தமிழ்நாட்டு ஆட்டோக்காரன் என்று சகல துறைகளிலும் பரவியிருக்கும் கொள்ளையடிக்கும் மனோபாவத்துக்குக் காரணமே, கோடிக் கணக்கில் கொள்ளையடிக்கும் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும்தான்.

காங்கிரஸ், பி.ஜே.பி. என்ற இரண்டு கட்சிகளின் ஊழல் நிர்வாகத்தைக் கண்டு மக்கள் அலுத்து விட்டனர். இப்போது மக்களுடைய தேவை, ஒரு மூன்றாவது அணி. மேற்கண்ட இரண்டு கட்சிகளைத் தவிர்த்த பிராந்தியக் கட்சிகளும், கம்யூனிஸ்ட் கட்சியும் ஒரு மூன்றாவது அணியைத் திரட்டி இருக்கிறது. இதற்கு வாக்களிப்பதைத் தவிர தற்போதய நிலையில் இந்திய வாக்காளருக்கு வேறு வழியில்லை என்றே தோன்றுகிறது.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

# தேர்தல் 2009 : ஓர் எதிர்வினை

ஹாய் சாரு,

இவ்வளவு நேரடியான விமரிசனங்களை தமிழில் இதுவரை எந்த விஷயத்திலும் எங்கும் படித்ததில்லை. மேடையில் வீரமாகப் பேசுபவர்கள்கூட பின்னாளில் அப்படிச் சொல்லவே இல்லை என்று வாதாடும் காலத்தில், உங்களுடைய இந்த வரிகள் நிச்சயமாக வேறு தளம்தான்.

நீங்கள் எக்காலத்திலும் இதுபோன்ற எந்த அரசியல் சீர்திருத்த அமைப்பிலும் தொடங்கயோ/சேர்ந்தோ விடாதீர்கள். அப்படி ஆரம்பித்த அமைப்புகள் பின்னாளில் என்ன ஆகிறது என்பதை நிறைய பார்த்தாகிவிட்டது. பாழாய்ப்போன பதவி ஆசை என்ற Precious (Ref: Lord of The Rings) காலப்போக்கில் நல்ல மனிதர்களைக் கூட வசியப்படுத்தி விடுகிறது.

உங்களைப் போன்ற விமரிசகர் கிடைப்பது மிகவும் அரிது.

வாழ்த்துக்கள்

ராஜ்

அன்புள்ள சாரு,

வணக்கம், என் பெயர் கோகுல். முன்பே நான் உங்களுக்குக் கடிதம் எழுதி இருக்கிறேன் (Ref: ‘கடவுளும் நானும்’). நீங்கள் தேர்தலில் வோட்டே போடமாட்டேன் என்று சொல்லியிருப்பது எனக்கு மிகவும் அதிர்ச்சியாக உள்ளது. இது மிகவும் தவறான நிலை என்று நினைக்கிறேன்.

Regards
**Gokul**

டியர் ராஜ்,

எல்லா அரசியல்வாதிகளையும் மிகக் கடுமையான முறையில் திட்டி குமுதத்திலேயே இரண்டு கட்டுரைகள் எழுதியிருந்தார் ஞாநி.

https://telegram.me/aedahamlibrary

அரசியல்வாதிகள் யாருக்காவது சூடு சொரணை இருந்தால் ஞாநி மீது நடவடிக்கை எடுத்திருப்பார்கள். அவர்களுக்குத்தான் அதெல்லாம் என்னவென்றே தெரியாதே. சரி, உண்மையைத்தானே எழுதியிருக்கிறார் என்று நினைத்திருக்கக்கூடும். ஒரு வெகுஜனப் பத்திரிகையில் இவ்வளவு கடுமையான மொழியில் வந்தது அதுதான் முதல்முறையாக இருக்கும். மற்றபடி புதிய கலாச்சாரம், தலித் முரசு போன்ற பத்திரிகைகளில் பலபேர் இப்படி எழுதியிருக்கிறார்கள். ஆனால் குமுதத்திலேயே அப்படிப் பிரசுரமானது எனக்குக் கொஞ்சம் ஆச்சரியம்தான். ஆனால் ஞாநியிடம் என்ன பிரச்சினையென்றால், அவரைப் பற்றிப் பாராட்டுதலாக ஒரு நிமிஷம்கூட நினைத்துவிட முடியாது. அடுத்த வாரமே, அவரே அதைக் காலி பண்ணிவிடுவார். உதாரணமாக, அரசு மருத்துவமனைகள் எவ்வளவு அற்புதமாக செயல்படுகின்றன என்று அவர் எழுதியிருந்தது. ராயப்பேட்டை அரசு மருத்துவமனைக்கு அவர் நடுராத்திரியில் போனாராம். இவர் யார் என்றே தெரியாமல் ரொம்பப் பிரமாதமாக கவனித்தார்களாம்.

நானும் அதே ராயப்பேட்டை மருத்துவமனையில் பதினைந்து நாட்கள் தங்கியிருக்கிறேன். அவந்திகாவின் மீது ஒரு கொலை முயற்சி நடந்து அவள் தலையில் பலமாக அடிபட்டு அங்கே கிடந்த போது அவளைக் கவனித்துக்கொள்வதற்காக அங்கே செல்ல நேர்ந்தது. கொலை வழக்கு என்பதால் அரசு மருத்துவ-மனையில்தான் சேர வேண்டும். ஒரு அரசியல் கட்சியைச் சேர்ந்த ஐந்து ரவுடிகளால் - ஒவ்வொரு ரவுடியும் 150 கிலோ இருப்பான் - அவந்திகா தாக்கப்பட்டாள்.

நான் தினமலரில் தொடர்ந்து பல ஆண்டுகளாக எழுதி வருவதாலும், அந்தக் கட்சிக்கும் தினமலருக்கும் ஆகாது என்பதாலும், என்னை பி.ஜே.பி.யைச் சேர்ந்தவன் என்று நினைத்துக்கொண்டு என்னைத் தாக்கத் திட்டமிட்டு, அந்த நேரத்தில் எதேச்சையாக அவந்திகா மாட்டிக்கொண்டதால் அவளைத் தாக்கிவிட்டார்கள். அவந்திகா பிராமண ஜாதியைச் சேர்ந்தவள் என்பதால் அது ஒரு கூடுதல் ‘ஆதாரமாகப்’ போய்-விட்டது அந்த ரவுடிகளுக்கு. தமிழ்நாட்டின் சில புரட்சிகர இயக்கங்களின் தலைமைப் பொறுப்பில் இருப்பவர்கள் கூட பிராமண ஜாதியைச் சேர்ந்தவர்கள்தான் என்பது அந்த ரவுடிகளுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. பின்னர் அந்த ரவுடிகள் மீது கொலை வழக்கு போடப்பட்டது. அவர்கள் தலைமறைவாகி விட்டதால் என் வீட்டுக்கு ஒரு மாத காலம் போலீஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. கடைசியில் அவர்களை அவந்திகா மன்னித்து விட்டதால் வழக்கில் சாட்சி சொல்லவில்லை. வழக்கு ரத்தாகியது.

https://telegram.me/aedahamlibrary

அப்போது நான் ராயப்பேட்டை மருத்துவமனையில் பார்த்த விஷயங்களை ஒரு நாவலாகவே எழுதலாம். லிஃப்ட்காரருக்கு லஞ்சம் கொடுத்தால்தான் லிஃப்டை எடுப்பார். நர்சுக்கு லஞ்சம் கொடுத்தால்தான் அவர் மருந்து கொடுப்பார். அவந்திகா இருந்த வார்டின் தலைமை நர்ஸே நூறு ரூபாயைக் கேட்டு வாங்கினார். அவருடைய சம்பளம் 20,000 ரூ. இருக்கும் என்றாலும் நான் கொடுத்த 100 ரூபாயைப் பார்த்து அவர் வாயெல்லாம் பல் ஆனது. ஐயோ, இவன் லஞ்சம் கொடுத்ததே தப்பு என்பார் ஞாநி. ஐயா, என் மனைவியின் உயிரைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் இருந்தேன் நான். அவர்களோ மிக வெளிப்படையாகக் காசு கேட்கிறார்கள், அதுவும் எப்படி? அப்போது லஞ்ச ஒழிப்புத்துறையின் தலைமை அதிகாரியாக இருந்த திலகவதி ஐ.பி.எஸ். அடிக்கடி அந்த மருத்துவமனைக்கு வந்து அவந்திகாவை நலம் விசாரித்துவிட்டுப் போய்க் கொண்டிருந்தபோதே அந்த அயோக்கியத்தனம் நடந்தது.

மூன்றாவது தளத்தில் இருந்த அந்த வார்டில் கக்கூஸில் தண்ணீரே வராது. அதைக் கீழே இருந்து பக்கெட்டில் கொண்டுவந்து கொடுக்கும் ஊழியருக்கு லஞ்சம். இல்லாவிட்டால் கக்கா மூச்சா எல்லாம் போய்விட்டுக் காகிதத்தில்தான் துடைத்துக்கொள்ள வேண்டும். அப்படித் துடைத்துக்கொண்டாலும் கக்கூஸை எப்படிச் சுத்தப்படுத்துவது? ஒரு சொட்டுத் தண்ணீர் வராது.

இரவு உறங்கவும் முடியாது. சுற்றி வர இருக்கும் வழிபாட்டுத்-தலங்களிலிருந்து மைக் மூலம் சத்தம். மார்ச்சுவரியில் இடம் இல்லாமல் பிணங்கள் அழுகி அதன் துர்நாற்றம் வேறு குடலைப் பிடுங்கியது. அவந்திகா சொன்னாள், ‘அந்த ரவுடிகள் போலீஸுக்குப் பயந்து தலைமறைவாகி எவ்வளவு இன்னல்களை அனுபவிக்கிறார்களோ அதேபோன்ற அல்லது அதை விட அதிக இன்னல்களை நாமும் அனுபவிக்க வேண்டியிருக்கிறது பாருங்கள்’ என்று.

அப்போது அந்த மருத்துவமனையில் நான் கண்ட காட்சி ஒன்று இப்போது நினைத்தாலும் குலை நடுங்கச் செய்கிறது.

மாலை ஐந்து மணி இருக்கும். ஒரு ஆட்டோவில் வந்து இறங்குகிறார்கள் சிலர். குப்பத்து ஜனங்கள் என்று பார்த்தாலே தெரிகிறது. ஒரு ஆளின் கை வெட்டப்பட்டு துண்டாகித் தொங்குகிறது. ஆனால் தனியாக வந்துவிடவில்லை. உடனே சிகிச்சை மேற்கொண்டால் கையை சேர்த்துவிடலாம். கூட வந்த பெண்கள் கண்ணீரும் கம்பலையுமாக அந்த ஆளை உள்ளே கூட்டி வந்தால் “இங்கே டாக்டர் இல்லை; வேறு எங்காவது அழைத்துப் போங்கள்” என்று அவர்களைத் துரத்தி அடித்து

https://telegram.me/aedahamlibrary

விட்டார்கள்.

சத்தியமாகச் சொல்கிறேன். இப்படித்தான் நடந்தது. ‘கை துண்டானது அடிதடியில் நடக்கவில்லை; விபத்தில்தான் நடந்தது’ என்று அந்த ஏழை மக்கள் நிரூபித்திருந்தால் அந்த மனிதருக்கு அன்று அங்கே சிகிச்சை அளிக்கப்பட்டிருக்கலாம். ‘இதெல்லாம் எதற்கு வம்பு?’ என்றுதான் எடுத்த எடுப்பிலேயே ‘டாக்டர் இல்லை’ என்று ஒரே போடாகப் போட்டுவிட்டார்கள் நர்ஸுகள். எவ்வளவோ போராடிப் பார்த்துவிட்டு அவர்கள் அதே ஆட்டோவில் வேறு எங்கோ சென்றார்கள். நேரமாகிவிட்டதால் கையை இனிமேல் சேர்க்கக் கூட இயலாது. அடிதடி கேஸில் சிகிச்சை அளித்தால் போலீஸ் டாக்டர்களை கோர்ட்டுக்கு இழுத்து அலைய வைப்பார்களோ என்ன எழவோ தெரியவில்லை. அந்த மனிதருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தால் கை காப்பாற்றப்பட்டிருக்கும்.

ஞாநி சொல்கிறார், அந்த மருத்துவமனையில் அவருக்கு நடு ராத்திரியில் அற்புதமாக சிகிச்சை அளித்தார்களாம்; அவர் யார் என்ற அடையாளம் தெரியாமலேயே.

ஞாநி ஐயா, இந்த மாதிரி அதிசயங்கள் எல்லாம் உங்களுக்கும், ராமேஸ்வரத்தைச் சேர்ந்த ஒரு படகோட்டியின் மகனான ஒருவர் ஜனாதிபதியாக ஆனாரே, அவருக்கும்தான் நடக்கும். எங்களைப் போன்ற சராசரிகளுக்கு நடக்காது.

ஒரு தனியார் மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சைக்காக நான் அனுமதிக்கப்பட்டிருந்தபோது, அதற்குத் தேவையான இரண்டு லட்ச ரூபாய் என்னிடம் இல்லை என்ற நிலையில் என் அத்யந்த நண்பர் ஒருவர் என்னை ஜி.ஹெச்.சில் அட்மிட் ஆகச் சொன்னார். அங்கே பார்த்தால் கடைநிலை ஊழியர்கள் ஒரு திடீர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். அந்த வேலை நிறுத்தம் எத்தனை நாட்கள் நீடித்திருக்கும் என்று நினைக்கிறீர்கள். கொஞ்சம் கற்பனை செய்து பாருங்களேன். ஒரு நாள்? இரண்டு நாள்? சரி, மூன்று நாள்? இல்லை, மொத்தம் பதினைந்து நாட்கள் நீடித்தது அந்த வேலை நிறுத்தம். அரசு மருத்துவமனையின் கதி இது.

இந்த இடத்தில்தான் ஞாநி போன்ற சீர்திருத்தவாதிகளிடமிருந்தும், கம்யூனிஸ்டுகளிடமிருந்தும் நான் வேறுபடுகிறேன். இந்த நாடு கிரிமினல்களால் ஆளப்படும் ஒரு நாடு. இங்கே இருக்கும் ஜனநாயகம் ஒரு கேலிக்கூத்து. அம்பானியும் அவரைப் போன்றவர்களும் வைத்ததுதான் இங்கே சட்டம். மாதம் 3000 ரூபாய் வருமானத்துக்குக்

https://telegram.me/aedahamlibrary

கூட வழியில்லாத ஒரு கபோதிப் பயல் அரசியலில் நுழைந்ததும் 3000 கோடிக்கு அதிபதி ஆகிறானே? அது எப்படி நடக்கிறது?

\- - - -

டியர் கோகுல்,

உங்கள் பதிவைப் படித்தேன். மேலே உள்ள பதில் உங்களுக்காகவும் எழுதப்பட்டது என்றே கொள்ள வேண்டும். நீங்கள் அப்பாவியாகவும், வெகுளியாகவும் தெரிகிறீர்கள். என்ன சொல்வது என்றே தெரியவில்லை. உங்களிடம் நான் தனியாகப் பத்து மணி நேரம் பேச வேண்டும். அவ்வளவு இருக்கிறது உங்களுக்குச் சொல்ல. அதுசரி, நீங்கள் என்னுடைய எல்லா எழுத்தையும் படித்திருக்கிறீர்களா? குறைந்தபட்சம் இணைய தளத்தில் வருவதையாவது படித்திருந்தால் என்னை உங்களுக்குப் புரிந்திருக்குமே?

நான் நக்ஸலைட் என்று சொன்னது ஒரு உணர்ச்சிவசப்பட்ட நிலையில். அதை தர்க்கரீதியாகவோ, இலக்கண ரீதியாகவோ எடுத்துக் கொள்ளக் கூடாது. தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தை அழித்து விடுவேன் என்று பாடினானே, அந்தக் கவிஞனின் கோபம். அவ்வளவுதான். மற்றபடி வன்முறையின் மூலமாக நடக்கும் சீர்திருத்தம், புரட்சி எதுவும் மனித குலத்துக்குக் கெடுதலையே விளைவிக்கும் என்பதில் எனக்கு சந்தேகமே இல்லை. நக்ஸலைட் ஆட்சியில் இப்படியெல்லாம் எழுத முடியுமா என்று என்னைக் கேட்கிறீர்கள். எழுதுவதா? ஆட்சி வந்ததுமே என்னைத் தூக்கில் போட்டுவிட்டுத்தான் அடுத்த வேலை பார்ப்-பார்கள். ஒருவேளை நக்ஸலைட் தலைவர் ரொம்ப நல்லவராக இருந்தால் என்னை நாடு கடத்தலாம். அதற்கு மேல் சலுகை எதிர்பார்த்தால் அது என் முட்டாள்தனம். நக்ஸல்பாரிகள் என்னை அமெரிக்க சீரழிவுக் கலாச்சாரத்தைச் சேர்ந்தவன் என்று வகைப்படுத்தி 20 ஆண்டுகள் ஆகின்றன. தீவிர கம்யூனிஸ்டுகளின் கலாச்சாரக் கோட்பாடும், தாலிபான், இந்துத்துவவாதிகள், தமிழ்க் கலாச்சாரவாதிகள் ஆகிய எல்லோருடைய கலாச்சாரப் பார்வையும் இம்மியளவும் வேறுபடாதவை.

ஆனால் உங்களுடைய பதிவு முழுவதும் இப்போது இந்தியாவில் நடந்துகொண்டிருப்பது ஜனநாயகம் என்ற நம்பிக்கையின் பேரில் எழுதப்பட்டுள்ளது. எனவே உங்களுக்கும் எனக்குமான விவாதம், எனக்கு ஜனநாயகத்தின் பேரில் நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பது பற்றி அல்ல. இந்தியாவில் நடப்பது ஜனநாயகமா இல்லையா என்பது பற்றித்தான். எனக்கு ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இல்லை

https://telegram.me/aedahamlibrary

என்று யார் சொன்னது? நான் ஃப்ரான்ஸில் இருந்திருந்தால் எனது வாக்குரிமைக்காக நீதிமன்றத்துக்கே சென்றிருப்பேன். ஏனென்றால், அங்கே நடப்பது ஜனநாயகம். அங்கே ஜனாதிபதி பாராளுமன்றத்துக்குப் போவதற்காக யாரும் போக்குவரத்தை நிறுத்தி வைப்பதில்லை. அங்கே ஜனாதிபதியின் குழந்தையும் ஜனாதிபதி வசிக்கும் தெருவில் துப்புரவுத் தொழிலாளியாகப் பணியாற்றுபவரின் குழந்தையும் ஒரே பள்ளியில் படிக்கிறார்கள். அங்கே பணக்காரனுக்கும் ஏழைக்கும் அடிப்படை வசதி ஒன்றுதான். ஃப்ரான்ஸ் மட்டும் இல்லை. அமெரிக்காவிலும் அப்படித்தான். அங்கே ஜனாதிபதி போக்குவரத்து விதியை மீறினால் ஒரு சாதாரண கான்ஸ்டபிள் ஜனாதிபதிக்கு அந்த இடத்திலேயே அபராதம் விதிக்கலாம். இங்கே கமிஷனர்களே முதலமைச்சரின் கால்களில் விழுந்துகொண்டிருக்கிறார்கள்.

என்ன கோகுல் இது, நீங்கள் ஏதோ அமெரிக்காவில் வாழ்ந்துகொண்டிருப்பவரைப் போல் அல்லவா பேசுகிறீர்கள்? இவ்வளவு ஆரம்ப நிலையிலேயே உங்களுக்கும் எனக்கும் கருத்து வேறுபாடு இருந்தால் நான் உங்களிடம் என்னவென்று விவாதிப்பது?

இங்கே இந்தியாவில் நடப்பது மன்னராட்சி. ஜனநாயகம் அல்ல. மன்னராட்சியில் நான் ஓட்டுப் போடுவது முட்டாள்தனம். இங்கே நடப்பது ஜனநாயகம்தான் என்று நீங்கள் நம்பினால் நேரில் வாருங்கள். ஒருநாள் பூராவும் உட்கார்ந்து பேசுவோம்.

சென்ற மாதம் இங்கே சாந்தோம் நெடுஞ்சாலை பூராவும் சாலையை மறித்துக் கொண்டு, வாகனங்களோ என்னைப் போல் நடப்பவர்களோ செல்லவே முடியாமல் 100 கட் அவுட்டுகள் வைக்கப்பட்டிருந்தன. அந்தச் சாலை மூலம்தான் தமிழ்நாட்டின் அரசாங்கத்தையே கட்டிக் காப்பவர்கள் - மந்திரிகள், போலீஸ் அதிகாரிகள், நீதிபதிகள் - அனைவரும் போய்க் கொண்டிருக்கின்றனர். அவர்களின் வசிப்பிடம் இங்கேதான் உள்ளது. ஒரு வார காலம் இருந்தது அந்தக் கட் அவுட்டுகள். யாருக்குமே அதை நீக்க வேண்டும் என்று தோன்றவில்லை. தவறு; தோன்றியிருக்கும். அதை நீக்கும் அதிகாரமும் இருக்கும். ஆனால் நீக்கினால் அவர்கள் தண்ணியில்லாக் காட்டுக்குத் தூக்கி அடிக்கப்படுவார்கள். கட் அவுட்டில் இருந்த பேர்வழி யார் தெரியுமா? மு.க. முத்து என்பவரின் புதல்வராம். ஒரு மு.க. முத்துவின் புதல்வருக்கே இந்த மரியாதை என்றால் மற்ற அரசியல்வாதிகளின் அதிகார வரம்பை யோசித்துப் பாருங்கள்!

கிராமங்களில் தலித்துகள் இன்னமும் ஊருக்குள்ளே வர முடியவில்லை. வந்தால் அவர்கள் வாயில் பீயைக் கரைத்து ஊற்றுகிறார்கள்.

https://telegram.me/aedahamlibrary

(திண்ணியம்). பஞ்சாயத்துத் தேர்தலில் நின்றால் தலையை அறுத்து விடுகிறார்கள். கோவிலுக்குள் செல்ல முடியவில்லை. எல்லாவற்றையும் பற்றி எழுதியிருக்கிறேனே; அதையெல்லாம் படித்த பிறகும் இங்கே நடப்பது ஜனநாயகம் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

சரி, என்னுடைய எழுத்தைக்கூடப் படிக்க வேண்டாம். ஒரு மாத காலம் ஜூனியர் விகடனை வாங்கிப் படியுங்கள். இந்த நாடு எப்படி இருக்கிறது என்று உங்களுக்குப் புரியும்.

தமிழ்நாட்டில் உள்ள ஒரு ஊரில் நீங்கள் வீடோ நிலமோ வாங்கினால் அந்த ஊரில் உள்ள ஒரு பிரமுகருக்கு நீங்கள் கமிஷன் கொடுக்க வேண்டும். ஒரு கோடிக்கு வாங்கினால் அவருக்குப் பத்து லட்சம். கொடுக்க மாட்டேன் என்று சொன்னால் உங்கள் தலை உங்கள் உடம்பில் இருக்காது. பத்திரிகையில் ஊர் பெயரைப் போட்டுத்தான் எழுதியிருந்தார்கள். எனக்கு ஊர் பெயரை எழுதக்கூட பயமாக இருக்கிறது. இப்படித்தான் ஒரு கடையில் போய் கமிஷன் கேட்டிருக்கிறார்கள். கடைக்காரர் “தர முடியாது; உன்னால் ஆனதைப் பார்த்துக்கொள்” என்று திமிராகச் சொல்லியிருக்கிறார். உடனே அந்த நகரத்தின் பொதுப்பணித்துறையிடம் சொல்லி அந்தக் கடையைச் சுற்றி ரோட்டில் பள்ளம் தோண்டிவிட்டார்கள். யாரும் கடைக்குள்ளே போக முடியாது. அதுதான் ஊரிலேயே பெரிய ஷாப்பிங் மால். உடனே அந்தப் பிரமுகரின் வீட்டு வாசலைத் தட்டியிருக்கிறான் ஒரு ஒல்லியான ஆள். யார் என்று கேட்டதற்கு “அந்தக் குறிப்பிட்ட கடை தாவூத் இப்ராஹீமின் பினாமி கடை. பள்ளத்தை மூடாவிட்டால் உங்கள் குடும்பத்தையே க்ளோஸ் பண்ணி விடுவதாகச் சொல்லச் சொல்லி பாகிஸ்தானிலிருந்து போன் வந்திருக்கிறது” என்று சொல்லி விட்டு அந்த ஒல்லியான ஆள் புறப்பட்டுப் போய்விட்டான். அடுத்த ஒருமணி நேரத்தில் பள்ளம் நிரப்பப்பட்டுவிட்டது.

இவர் லோக்கல் தாதா என்றால் அவர் இண்டர்நேஷனல் தாதா. அமெரிக்காவே அவரைப் பார்த்து பயந்துகொண்டிருக்கும்போது இந்த லோக்கல் தாதா எம்மாத்திரம்?

இப்போது சொல்லுங்கள் கோகுல், இது ஜனநாயக நாடா?

சரி, நீங்கள் சொல்லும் சுயேட்சை வேட்பாளர் சரத் பாபு நான் வசிக்கும் தென்சென்னைத் தொகுதியில் நிற்கிறார். அப்பழுக்கற்றவர். ஆனால் இவருக்கு அளிக்கப்படும் வாக்குகள் அத்தனையும் செல்லாத வாக்குகளுக்குத்தானே சமம்? இவர் எப்படியும் தோற்கத்தானே போகிறார்? தோற்பவருக்கு நான் ஏன் வாக்களிக்க வேண்டும்? அது

https://telegram.me/aedahamlibrary

மட்டும் அல்ல; இந்தத் தேர்தல் முறையே சரியில்லை என்று ஏற்கனவே எழுதியிருக்கிறேன். ஒரு தொகுதியில் அ.தி.மு.க. ஒரு லட்சம் வாக்குகளும், தி.மு.க. ஒரு லட்சம் வாக்குகளுக்கு ஒரே ஒரு ஓட்டு குறைவாகவும் வாங்கினால் அ.தி.மு.க.தானே ஜெயித்ததாகக் கருதப்படும்? அப்படியானால் அந்த ஒரு லட்சத்துக்கு ஒரு ஓட்டு குறைவான அத்தனை வாக்குகளும் செல்லாத வாக்குகள் மாதிரிதானே? மேலும், மற்ற உதிரிக் கட்சிகளெல்லாம் சேர்ந்து ஒரு 50,000 ஓட்டு வாங்கியிருந்தால் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்பட்ட அ.தி.மு.க. வேட்பாளரை அந்தத் தொகுயில் உள்ள பெரும்பான்மை மக்கள் விரும்பவில்லை என்றுதானே பொருள்? ஏனென்றால் அவருக்கு எதிரான வாக்குகள்தானே ஆதரவு வாக்குகளைவிட அதிகம்? இப்படி ஒரு அபத்தமான தேர்தல் முறையில் நான் எப்படி வாக்களிப்பது?

அதனால்தான் விகிதாச்சார வாக்கு முறை -அமெரிக்காவில் இருப்பது போல் - இந்தியாவில் இருந்தால் நானும் வாக்களிப்பேன்.

22.04.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

# மரண பூமி: வரலாற்றின் பைத்தியக்காரத்தனம்

“சிறிலங்கா அரசு, விடுதலைப் புலிகள் என இருதரப்புமே யுத்த விதிகளை மீறிக் கொண்டிருக்கிறார்கள்” என்கிறார் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தைச் (Human Rights Watch) சேர்ந்த ஆய்வாளர் Anna Neistat. தொடர்கையில் “வன்னியில் சிறிய நிலப்பரப்பினுள் ஏறக்குறைய ஒரு லட்சம் மக்கள் மரணப்பொறியினுள் சிக்கியிருக்கிறார்கள். அந்தப் பகுதியை மோதல் தவிர்ப்பு இடமாக இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தும் அந்தப் பகுதியினுள் அரசப் படையினர் தொடர்ச்சியாகவும் கண்மூடித்தனமாகவும் எறிகணை வீச்சுகளை நிகழ்த்துகிறார்கள். அங்கு சிக்கயிருக்கும் மக்கள் அங்கிருந்து வெளியேற முடியாதவாறு விடுதலைப் புலிகள் மக்களைத் தடுத்து வைத்திருக்கிறார்கள்” என்கிறார் Anna Neistat.

இதுதான் இப்போது இலங்கையின் வட மாகாணங்களில் இருக்கும் தமிழர்களின் நிலை. முப்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது இந்த நிலைமை. ஒரு பக்கம் இலங்கை ராணுவம். இன்னொரு பக்கம், போராளிகள். இரண்டுக்கும் இடையே கண்ணி வெடிகளாலும், எறிகணைகளாலும், துப்பாக்கிக் குண்டுகளாலும் செத்துக் கொண்டிருக்கும் மக்கள். தங்கள் சொந்த பூமியையும் மொழியையும் உற்றம் சுற்றத்தையும் இழந்து கனடா, ஆஸ்திரேலியா, ரஷ்யா, மேற்கு ஐரோப்பிய நாடுகள் என்று உலகம் பூராவும் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறது தமிழ் இனம்.

இதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார் என்று ஆராய்ச்சி செய்து ஒரு சிலர் மீது, அல்லது ஒருவர் மீது குற்றம் சாட்டிக் கொண்டிருக்கின்றனர் புத்திஜீவிகள். அரசு ராணுவத்துக்கும் போராளிகளுக்கும் இடையே சிக்கிக்கொண்டு தமிழ் மக்கள் தினந்தோறும் ஆயிரக்கணக்கில் செத்து மடிந்துகொண்டிருக்கிறார்கள். ஒரே ஒருவரைப் பிடிப்பதற்காக

https://telegram.me/aedahamlibrary

ஒட்டுமொத்த தமிழர்களையே கொன்று போடுவேன் என்று வெளிப்படையாகவே அறிவித்துவிட்டுப் போரில் இறங்கி விட்டார் ராஜபக்சே. ஹிட்லர் யூதர்களை என்ன செய்தானோ அதே காரியத்தைத்தான் ராஜபக்சே தமிழர்கள் மீது செய்து கொண்டிருக்கிறார். நடந்துகொண்டிருப்பது ஒரு இன அழித்-தொழிப்பு (Genocide). சதாம் ஹுசேன் ஒரு சர்வாதிகாரி என்பதால் ஈராக்கின் உள்ளே ராணுவத்தை அனுப்பி ஈராக்கையே மரண பூமியாக ஆக்கியது அமெரிக்கா. அதைத்தான் தனது சொந்த நாட்டுக்குள்ளேயே செய்து கொண்டிருக்கிறார் ராஜபக்சே.

குறைந்தபட்சம், ஈராக்கில் நடக்கும் கொடூரத்தை எதிர்த்துப் பேசவும், ஈராக் மக்களுக்காகக் குரல் கொடுக்கவும் உலகம் பூராவும் புத்திஜீவிகளும், பத்திரிகையாளர்களும், மனித உரிமை அமைப்புகளும் இருக்கின்றன. அந்த மக்களுக்கு எதிராக நடத்தப்படும் அநீதியும் வன்கொடுமையும் உலக மக்களின் கவனத்துக்காவது கொண்டு வரப் படுகிறது. ஆனால் இலங்கையில் ஒரு இனம் முற்றுமாக அழித்தொழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது - அதுவும் அதே இனத்தைச் சேர்ந்த, அதே மொழியைப் பேசும் மக்கள் இந்தியாவின் தென்கோடியில் ஒரு தனி மாநிலமாக இருந்துகொண்டிருக்கும் நிலையில் கூட - அது பற்றி யாரிடமிருந்தும் ஒரு வார்த்தைகூட வரவில்லை. நோம் சாம்ஸ்கி கூட “எனக்கு இலங்கையில் நடப்பது பற்றிய விபரங்கள் இல்லை” என்கிறார்.

வட இந்தியப் பத்திரிகைகளை எடுத்துக்கொண்டால் இது பற்றிய பேச்சே இல்லை. வட இந்தியர்களுக்கு எப்போதுமே தென்னிந்தியர்களைப் பிடிக்காது. ஒட்டு மொத்தத் தென்னிந்தியர்களையும் மதறாஸி என்று அழைப்பவர்கள் அவர்கள். வட இந்திய அரசியல்வாதிகளைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். இந்தக் குள்ளமான கறுப்பர்களுக்குத் தனி நாடுகூட வேண்டுமா என்றுதான் யோசிப்பார்கள். ஈழத் தமிழனுக்கும் தமிழ்நாட்டுத் தமிழனுக்கும் ஒரு மலையாளிக்கும் அவர்களுக்கு வித்தியாசம் தெரியாது. பாங்க்ளா தேஷி, சிங்களர், இந்தியர் எல்லோரையுமே ‘இந்தி’ என்று அழைக்கும் ஒரு சராசரி ஐரோப்பியனின் மனோபாவம்தான் தென்னிந்தியர் குறித்தும் வடக்கத்தியரின் மனோபாவமாக இருந்து வருகிறது.

சோனியா காந்தி குடும்பமும் காங்கிரசும் சாதித்து வரும் மௌனம் ஒரு பழிவாங்கல். ராஜீவின் கொலைக்கு இந்திய அரசை விட்டுப் பழி வாங்குகிறார்கள். ஒரே ஒருவர் செய்த தவறுக்காக இன்று தினம் தினம் ஆயிரக்கணக்கான தமிழர்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு

https://telegram.me/aedahamlibrary

லட்சம் பேர் தங்கள் சொந்த பூமியிலேயே அகதிகளாக்கப்பட்டு வதைமுகாம்களில் வாழ்கிறார்கள். இந்த வதைமுகாம்கள் ஹிட்லரின் வதைமுகாம்களுக்கு எந்த விதத்திலும் குறைந்ததாக இல்லை. அகதிகளின் வைத்தியசாலைகளில் இலங்கை ராணுவத்தால் குண்டுகள் வீசப்படுகின்றன. பொக்கணை என்னும் பிரதேசத்தில் உணவுப் பொருட்களைப் பெறுவதற்காக நின்று கொண்டிருந்தவர்கள் மீது இலங்கை இராணுவத்தினர் எறிகணைகளை வீசியுள்ளனர்.

இலங்கையிலிருந்து வரும் புகைப்படங்களையெல்லாம் பார்க்கும்போது நாம் ஒரு நாகரீக சமூகத்தில்தான் வாழ்கிறோமா என்றே சந்தேகமாக இருக்கிறது. நாஜிகளின் ஜெர்மனியை அப்படியே நினைவுபடுத்தும் புகைப்படங்கள் அவை. தமிழ் இனமே பூண்டோடு அழிந்தாலும் பரவாயில்லை; நம் தலைவரைக் கொன்றவர் சாக வேண்டும் என்பதே காங்கிரஸ் மற்றும் சோனியாவின் எண்ணமாக இருக்கிறது. இல்லாவிட்டால் இலங்கை அரசுக்கு இந்திய அரசு செய்துகொண்டிருக்கும் உதவிகளுக்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும்? இந்த வகையில் இதை ஒரு proxy war என்றே கூறலாம்.

இந்த இனப்படுகொலைக்கு இந்தியா முழுவதும் நிலவி வரும் மௌனத்துக்கு முக்கியக் காரணமாக எனக்குத் தோன்றுவது, தமிழ்ச் செய்தி ஊடகத்தில் இருந்து வரும் பிராமண ஆதிக்கம். அதிலும் முக்கியமாக, இந்து தினசரி மற்றும் சோ போன்றவர்களின் அபிப்பிராயமே இந்திய ஊடகங்கள் முழுவதையும் நிர்ணயம் செய்கிறது. தமிழ் பிராமண புத்திஜீவிகள் நம் கண்களுக்கெதிராக ஒரு இனப்படுகொலையை நடத்தி வரும் ராஜபக்சே என்ற ஃபாசிஸ்டை ஆதரிப்பதற்குக் காரணம் என்ன? ஒருவேளை தங்களை ராம வம்சத்தோடும், ஈழத் தமிழர்களை ராவண குலத்தோடும் இனம் காண்கிறார்களா? இவ்வளவு கொடூரமான படுகொலைகள் நம் கண் முன்னே நடந்து கொண்டிருக்கும்போது அது பற்றிய செய்திகள் கூட இந்தியப் பத்திரிகைகளிலும், உலகப் பத்திரிகைகளிலும் வராததன் காரணம் என்ன? இந்து ராம் என்ன நினைக்கிறாரோ அதுவே சல்மான் ருஷ்டி வரை போய்ச் சேருகிறது. புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமாக உலகமெங்கும் அறிவிக்கப்பட்டிருப்பதற்காக - அவர்கள் தங்களுடைய சக இயக்கத்தினரைக் கொன்றதற்காக - இலங்கையில் வாழ்வதற்கு விதிக்கப்பட்ட லட்சக்கணக்கான தமிழர்கள் செத்து மடிய வேண்டுமா?

ஹிட்லரின் நாஜி ஜெர்மனியைப் போன்ற அதே சூழல்தான் இப்போது இலங்கையில் நிலவி வருகிறது. தமிழ், சிங்களப் பத்திரிகையாளர்களில்

https://telegram.me/aedahamlibrary

பலர் கொல்லப்பட்டு வருகின்றனர். அய்யாத்துரை நடேசன், மயில்வாகனம் நிமலராஜன், ரிச்சர்ட் டி சொய்சா, தேவிஸ் குருகே, தர்மரத்தினம் சிவராம், ரேலங்கி செல்வராஜா, நடராஜா அற்புதராஜா, ஐ. சண்முகலிங்கம், சுப்ரமணியம் சுகிர்தராஜன், சின்னத் தம்பி சிவமகாராஜா, சம்பத் லக்மால் சில்வா, இசைவிழி செம்பியன், ரி.தர்மலிங்கம், சுரேஸ், கேதீஸ் லோகநாதன், சந்திரபோஸ், புண்ணியமூர்த்தி, சத்தியமூர்த்தி - இவர்கள் எல்லோரும் இலங்கை ராணுவத்தால் கொல்லப்பட்ட பத்திரிகையாளர்கள். இந்த ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் தேதி கொழும்பில் வைத்து மர்மமான முறையில் கொல்லப்பட்ட ஸண்டே லீடர் ஆசிரியரான லசந்த விக்ரமதுங்கவின் மனைவி சோனாலி சமரசிங்க தனது மூன்று குழந்தைகளுடன் பாதுகாப்பு கருதி இலங்கையை விட்டு வெளியேறிவிட்டார். இன்னும் அங்கே உயிரோடு தப்பிய ஒன்றிரண்டு தமிழ் சிங்களப் பத்திரிகையாளர்களும் இலங்கை ராணுவத்துக்கு அஞ்சி நாட்டை விட்டு வெளியேறிவிட்டனர்.

பிணங்களிலிருந்து தனது உணவை எடுத்துக் கொள்ளும் கழுகுகளைப் போல இலங்கையில் விழும் தமிழ்ப் பிணங்களிலிருந்து தங்களுக்கு எத்தனை பாராளுமன்ற சீட்டுகள் கிடைக்கும் என்று கணக்கிட்டுக் கொண்டிருக்கின்றன தமிழ்நாட்டின் இரண்டு அரசியல் கழுகுகள். இலங்கைத் தமிழருக்காக கருணாநிதி விடும் கண்ணீர் அத்தனையும் வெறும் கபட நாடகம் என்பதை மக்கள் புரிந்துகொண்டு விட்டனர். இன்றைய தினம் (23.4.2009) இலங்கைத் தமிழரின் துயர் துடைப்பதற்காக தமிழகத்தில் வேலை நிறுத்தம் அறிவித்திருக்கும் கருணாநிதி யாருக்கு எதிராக இந்த வேலை நிறுத்தத்தைச் செய்கிறார்? மத்திய அரசே இவருடைய கட்சியும் சேர்ந்த கூட்டணி அரசுதானே? இவர் தன்னுடைய எம்.பி.க்களையும் மந்திரிகளையும் ராஜினாமா செய்ய வைக்க வேண்டியதுதானே? முன்னுதாரணமாக கனிமொழியே முன்வந்து ராஜினாமா செய்யலாமே? செய்ய மாட்டார்கள். இவர்களுக்குத் தமிழர்களின் உயிரை விட எம்.பி. பதவியும் மந்திரி பதவியும் முக்கியம். இதைத் தனது தேர்தல் வெற்றிக்கு ஆதாரமாக எடுத்துக் கொண்டு விட்டார் ஜெயலலிதா.

தமிழ்நாட்டுத் தமிழர்கள் அத்தனை பேரும் தங்கள் பக்கத்து நாட்டில் ராஜபக்சே என்ற சிங்களப் பேரினவாதியால் தங்கள் தமிழ் இனம் கூண்டோடு அழிக்கப்படுவது பற்றி கடும் துயரத்தில் இருக்கிறார்கள். இந்தத் தமிழின அழித்தொழிப்புக்குத் தனது குடும்பத்தினரின் பதவி ஆசைக்காக மௌன சாட்சியாக இருந்துகொண்டிருக்கும்

https://telegram.me/aedahamlibrary

கருணாநிதியை தமிழர்கள் மன்னிக்கவே மாட்டார்கள். இது வரப்போகும் பாராளுமன்றத் தேர்தல் முடிவில் எதிரொலிக்கும். நேற்று வரை இலங்கைத் தமிழருக்கு எதிராக இருந்த ஜெயலலிதா என்ற கபவேடதாரி கருணாநிதியின் பச்சையான பதவி ஆசையால் இப்போது தமிழின ஆதரவாளராக மாறிவிட்டார். ஈழத் தமிழருக்கான தமிழகத் தமிழரின் துயரமும், கருணாநிதியின் மீதான அவர்களின் கோபமும் இப்போது ஜெயலலிதாவுக்கு ஆதரவாக விழப் போகும் வாக்குகள்.

தமிழக அரசியல்வாதிகளின் தேர்தல் லாப நஷ்டக் கணித விளையாட்டு இப்படி நடந்து கொண்டிருக்கும்போது இலங்கையில் தமிழ் இனம் தங்களுக்காகக் குரல் கொடுப்போர் கூட யாருமின்றி அழிந்து கொண்டிருக்கிறது.

23.04.2009

(தமிழ்ப் பத்திரிகைகளில் வெளிவர முடியாத இக்கட்டுரை

கலா கௌமுதியில் கவர் ஸ்டோரியாக வந்தது.)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

# No Jokes On The Palm Leaf

Back in Delhi, I am told, Mani Shankar Aiyar is famous for his witty ripstes, sharp one-liners and punch lines that have audiences in splits. So I set out for Mayiladuthurai expecting to be vastly entertained. Only to find that in his constituency, the venerable Congress candidate cuts a very different figure. The starched white kurta-pyjama that the cabinet minister wears in Delhi has been replaced by the local garb of dhoti and shirt. And it's been a long time since Aiyar made a joke here, at least in public. That last joke was in 2003, when Jayalalitha, on the advice of her astrologers, gifted an elephant to the Guruvayur temple in Kerala. Aiyar found the image this conjured up irresistible. He remarked, no doubt in an allusion to Puratchi Thalaivi's elephantine proportions, that she could just as well have gifted herself to the temple. Alas, the queen was not amused, nor were her loyal supporters. Just a few days later, Aiyar was waylaid and attacked by AIADMK men near Nagapattinam, slippers were thrown at him in his own constituency, and his office ransacked.

That incident taught him a salutary lesson about the perils of shooting his mouth off. But another reason why Aiyar is uncharacteristically solemn and sober in his speeches in Mayiladuthurai is, quite simply, that his Tamil isn't fluent enough for him to pun or play on words. In fact, for locals, Aiyar's Tamil is itself something of a joke-they describe it as a bizarre mix of Brahmin Tamil and the halting Tamil spoken by foreigners. "It reminds us of Subramanian Swami," people in Mayiladuthurai tell me. "He's another one who speaks this kind of strange Tamil." Another thing the locals find strange is that Aiyar affixes his caste to his name. "Which politician does that in Tamil Nadu, especially if you have a Brahmin surname!" they say incredulously.

Mani Shankar Aiyar's mantra, ever since he first contested from

https://telegram.me/aedahamlibrary

Mayiladuthurai in 1991, has been: “I shall make Mayiladuthurai the Dubai of India!” Some may wonder why on earth Mayiladuthurai, a bastion of Tamil culture, would ever want to be Dubai. In this constituency stands the magnificent 12th century Chola temple of Darasuram in Kumbakonam. Here, too, is the ancient port city of Poompuhar, home of Kovalan and Kannagi, the protagonists of the great Tamil epic Silappadikaram. M. V. Pillai, author of the first Tamil novel, Prathaba Mudaliyar Chariththiram, written in 1857, hailed from here he was the village munsif. Literacy and education levels have been high here for a long time.

No, Aiyar hasn’t quite brought glittering Dubai-style shopping malls to Mayiladuthurai. But there’s no denying that he has brought development to his constituency. The roads here are of a smoothness to rival Hema Malini’s cheeks. The villages look prosperous and clean, with drinking water, electricity, toilets, community centres, even well-tended graveyards. I get a shock when I enter the toilet at the city bus stop.

“I have to pay Rs 2 to take a leak here?” I ask incredulously. The man at the toilet door apologises: “I feel horrible having to do this.” Must be a Dubai custom, imported to Mayiladuthurai.

Among Aiyar’s other gifts to Mayiladuthurai are a gas plant, a thermal power plant, and yet another power plant fuelled by sugarcane waste. There’s also an impressive Rs 20-crore stadium, better than any in Chennai, much used by local students. But there aren’t enough employment opportunities for the local population. Many go abroad to seek their fortunes. “This brain drain is one of the reasons why this place hasn’t yet become Dubai,” Aiyar tells me, looking rather dejeeted. His characteristic ebullience is definitely missing. And with reason.

His opponent, O.S.Manian of the AIADMK, is a well-networked local man, who people say participates closely in their daily lives and problems. Manian emphatically points out that when more than 90 children died in a fire in a Kumbakonam school, he was right there to help and console, whereas Aiyar was unable to reach immediately. “When we local people approach Aiyar with a problem, he pushes us away, saying such local matters don’t come under an MP’s purview,” complains Manikandan, who runs a small stall at the Mayiladuthurai town bus stop. Many others echo similar views.

But what seems to have made this election battle a really uphill one for Aiyar

https://telegram.me/aedahamlibrary

is the wave of public sentiment against Karunanidhi, whose DMK is the Congress party's alliance partner in Tamil Nadu. Karunanidhi's five-hour after-breakfast to pre-lunch "fast", with his first wife sitting at his feet and the second wife at his head-a scene aired repeatedly on Sun TV and Kalaignar TV-has earned him widespread ridicule. Aiyar has also been hit by the Congress's own stand on the Tamil Eelam issue-it is seen to be looking the other way while thousands of Eelam Tamils face death and disaster. After Rajiv Gandhi's assassination by the LTTE, local Tamils had distanced themselves from the Eelam cause. But that was 19 years ago, and now it's again an emotive issue for them. "So many Tamils are being killed in Eelam-what's Aiyar doing about that?" a municipal sweeper asks me heatedly.

Jayalalitha, meanwhile, has done an about-turn. "Support our alliance and I shall fight for a separate Eclam till my death" is her new trumpet call. Her election rallies show her at her histrionic best. Referring to the DMK taunt that she knows nothing about children or family, she turns to the crowd, arms stretched out, and pleads, "Aren't you my family? Aren't you my children?" The crowd roars back, "Yes! Yes!"

A popular AIADMK slogan in Mayiladuthurai these days mockingly asks: "arukku naadi paarkalaamaahat do the palm leaves say about Aiyar?)" The palm leaves refer to Mayiladuthurai's famous Vaitheeswaran Kovil, famous for its centuries-old palm leaves with astrological predictions written on them. You go there, give your name, and you will be shown a palm leaf on which your destiny is written. Even if your name is Obama, I'm told, you will find your palm leaf.

As I wait near a bus stop, baking in the sun, while the photographer goes in search of the shots he wants, three women approach me. They're middle-aged, heavily caked with powder and paint. "You want to come?" they ask. "Forget about my coming." I answer, "what do you think of the coming election?" "First attend to us, then we'll tell you about the election" they laugh. Unfortunately, just then, the photographer comes back and hurries me off to our meeting with Mani Shankar Aiyar.

"Write this in bold letters," Aiyar instructs me, as his parting shot: "Dubai is collapsing, but Mayiladuthurai is growing rapidly." I do not ask him if he has consuited the palm leaves.

(அவுட்லுக் இதழில் வெளிவந்த இந்தக் கட்டுரையை

https://telegram.me/aedahamlibrary

ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் பரீதம் சக்ரவர்த்தி)

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

# தேசத்தை விற்றவர்கள்

**ஆ**ஃப்ரிக்கா கண்டத்தின் தென்கிழக்கில் மொஸாம்பிக், ஸாம்பியா, தான்ஸானியா ஆகிய நாடுகளால் சூழப்பட்ட மலாவி என்ற ஒரு தேசம் இருக்கிறது. அங்கே இப்போது ஜனாதிபதியாக வெற்றி பெற்றிருக்கும் பிங்கு வா முத்தாரிகா (Bingu wa Mutharika) தேர்தலில் ஓட்டு சேகரிப்பதற்காக ஒரு காரியம் செய்வார். மக்கள் அதிகமாகக் கூடும் ஒரு ஷாப்பிங் மாலுக்குச் சென்று அங்கே திரண்டிருக்கும் அத்தனை பேரிடமும் அங்கே குவிக்கப்பட்டுள்ள பொருட்களில் எவ்வளவு வேண்டுமானாலும் அள்ளிக்கொண்டு போகலாம் என்று மைக்கில் தெரிவிப்பார். ஓரிரு நிமிடங்களிலேயே அந்த ஒட்டு மொத்த ஷாப்பிங் மாலும் தூசு துரும்பு இல்லாமல் சுத்தமாகிவிடும். மக்கள் தங்களால் எவ்வளவு முடிகிறதோ அவ்வளவையும் அள்ளிக் கொண்டு ஓடுவார்கள். மாலில் அன்றைய தினம் இருந்த அத்தனைப் பொருட்களுக்குமான தொகையை முத்தாரிகா கட்டிவிடுவார்.

அதன் பிறகு அடுத்த தேர்தல் வரும் வரை அவரும் அவருடைய குடும்பத்தாரும் அந்த தேசத்தை எவ்வளவு கொள்ளையடிக்க முடியுமோ அந்த அளவுக்குக் கொள்ளையடிப்பார்கள். இது போன்ற பல கதைகளை ஆஃப்ரிக்க மற்றும் லத்தீன் அமெரிக்க தேசங்களில் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

அந்தக் கதைதான் இப்போது தமிழ்நாட்டில் கருணாநிதியின் குடும்பத்தினரால் நடந்து கொண்டிருக்கிறது. இதை யாருமே இங்கே எதிர்த்து எழுத முடியாத நிலை வேறு நிலவுகிறது. கருணாநிதியின் மகன் அழகிரியை எதிர்த்து செய்தி வெளியிட்டதற்காக கருணாநிதியின் பேரனான கலாநிதியின் செய்தித்தாளான 'தினகரன்' அலுவலகம் மதுரையில் கொளுத்தப்பட்டு மூன்று பேர் கொலை செய்யப்பட்ட சம்பவம் இதற்கு ஒரு உதாரணம். இந்தப் பிரச்சினையில் கருணாநிதி தன் மகனுக்கே ஆதரவு அளித்து கலாநிதியின் சகோதரரான

https://telegram.me/aedahamlibrary

தயாநிதியின் மத்திய மந்திரி பதவியைப் பறித்து கட்சியை விட்டே விரட்டினார். இந்த நாடகம் ஒருசில மாதங்களே நீடித்தன. இப்போது தயாநிதியின் முக்கிய எதிரியான கனிமொழியே “கலைஞரின் கையில் உள்ள போர்வாள் தயாநிதி” என்று பொதுக் கூட்டங்களில் பேசுகிறார். இந்த மனமாற்றத்திற்கு என்ன காரணம் இருந்திருக்கக்கூடும் என்பது சிறு பிள்ளைக்குக்கூட தெரிந்த விஷயம்.

கனிமொழியின் அரசியல் பிரவேசம் குறித்து ஆதரவாக எழுதியதற்கு வாசகர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்வதைத் தவிர எனக்கு இப்போது வேறு வழியில்லை.

அ.ராசா தொலைபேசித் துறை மந்திரி ஆன பிறகு நடந்த ஸ்பெக்ட்ரம் ஊழலில் 10,000 கோடி ரூபாய் சம்பந்தப்பட்டிருப்ப-தாகச் சொல்கிறது பத்திரிகை செய்தி. இதில் ஒவ்வொரு நபருக்கும் கிடைத்திருக்கும் பங்கு 350 கோடி ரூபாய் என்று தெரிய வருகிறது.

தி.மு.க.வின் நிலை இது என்றால், காங்கிரஸின் ஊழல் இதைவிடப் பல மடங்காக இருக்கிறது. மொத்தம் எல்லா அரசியல்வாதிகளும் சேர்ந்து ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் ஸ்விஸ் வங்கியில் வைத்திருக்கிறார்கள். இதில் காங்கிரஸ் கட்சியினர்தான் அதிகம். ஒட்டுமொத்தமாக இவர்கள் இந்த தேசத்தையே விற்றிருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

சுவிட்ஸர்லாந்து நாட்டிலிருந்து வெளிவரும் சுவிட்சர் இல்லஸ்ட்ரேட் பத்திரிகை கடந்த 1991ஆம் ஆண்டு நவம்பர் 11 தேதியிட்ட இதழில் ஸ்விஸ் வங்கியில் பணம் போட்டுள்ளவர்களின் ஒரு பட்டியலை வெளியிட்டது. அதில் பெரும்பாலும் இந்தியா போன்ற ஏழை நாடுகளைச் சேர்ந்த அரசியல்வாதிகளின் பெயர்களே இருந்தன. அந்தப் பட்டியலில் முதல் 14 இடத்தில் இடம்பெற்றிருப்பவர் ராஜீவ் காந்தி. அவர் போட்டுள்ள தொகை 11,000 கோடி ரூபாய். எல்லாம் ராணுவத் தளவாடங்களை வாங்குவதில் அடித்த கொள்ளை. பட்டவர்த்தனமாக பல லட்சம் பேர் படிக்கும் பத்திரிகையில் ராஜீவின் புகைப்படத்துடன் செய்தி வந்தது. ராஜீவ் இப்போது உயிருடன் இல்லாததால் இந்தச் சொத்து அத்தனையும் ராஜீவ் குடும்பத்தைச் சாரும்.

இந்தச் செய்தி தொடர்பாக காங்கிரஸ் 18 ஆண்டுகளாக மௌனம் சாதித்து வருகிறது என்கிறார் எஸ்.குருமூர்த்தி. அவர் ஒரு பி.ஜே.பி. ஆதரவாளர் என்று சொல்லித் தப்பிப்பதில் பயனில்லை. அவருடைய குற்றச்சாட்டுக்கு காங்கிரஸ் தரப்பினர் பதில் சொல்லவில்லை என்பது மட்டும் அல்லாமல், “இந்தப் பணத்தை மீட்க நடவடிக்கை எடுக்க

https://telegram.me/aedahamlibrary

வேண்டும்” என்று பி.ஜே.பி. சொல்வதை காங்கிரஸ் ஏற்க மறுக்கிறது; இந்த நிலையில் உத்தரப் பிரதேசத்தின் தலித் குடிசைகளில் ஓர் இரவு தங்கி நாடகம் நடத்துகிறார் ராஜீவின் புதல்வர் ராகுல் காந்தி.

வடஇந்தியாவில் காங்கிரஸின் நிலை இப்படியிருக்க, இங்கே தமிழ்நாட்டில் காங்கிரஸுக்கு மிகத் தீவிரமான எதிர்ப்பு அலை வீசிக் கொண்டிருக்கிறது. ஒரு சில தினங்களுக்கு முன் கோவையில் ராணுவத்தினர் தாக்கப்பட்டது இதற்கு ஒரு உதாரணம். ஏனென்றால், இலங்கையில் தமிழ் இனம் ஒட்டுமொத்தமாக அழிக்கப்பட்டு வருகிறது. அதற்கு காங்கிரஸ் அரசும் சோனியாவும்தான் காரணம் என்று நம்புகிறார்கள் தமிழர்கள். இங்கிலாந்தில் சீக்கியக் குழந்தைகள் டர்பன் அணிந்துகொண்டு பள்ளிக்கு வரக்கூடாது என்ற சட்டம் கொண்டுவந்தால் அதில் தலையிடும் இந்திய அரசு, இங்கே இலங்கையில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் தினம் தினம் இலங்கை ராணுவத்தால் கொல்லப்படும்போது அது பற்றி சுண்டு விரலைக் கூட நீட்டவில்லை. அதுவும் தவிர, தமிழ் இனப் படுகொலையைச் செய்யும் ராஜபக்ஷேயின் ராணுவத்துக்கு உதவியும் செய்து கொண்டிருக்கிறது இந்திய அரசு. அப்படியிருக்கும்போது எந்த முகத்தை வைத்துக்கொண்டு தி.மு.க.வும் காங்கிரசும் இங்கே ஓட்டுக் கேட்க முடியும்?

இதுதான் தமிழர்களின் இன்றைய கேள்வி.

கருணாநிதியோ ஈழப் பிரச்சினை தொடர்பாக ஒரு நல்ல காரியத்தைக் கூடச் செய்யாமல் தொடர்ந்து மக்களை வெறுப்பேற்றும் காரியங்களையே செய்துகொண்டிருக்கிறார். அவருக்கும் வேறு வழியில்லை. இலங்கையில் லட்சம் தமிழர்கள் செத்தாலும் சரி, அவருக்கு அவருடைய மகளின் எம்.பி. பதவியும், அவருடைய கட்சிக்காரர்களின் மத்திய மந்திரி பதவியும் முக்கியம் என்று நிரூபணமாகி விட்டது. தன் புதல்வி கனிமொழியையும், மற்றவர்களையும் ராஜினாமா செய்யச் சொல்வதை விட்டுவிட்டு ஏற்கனவே பல இன்னல்களில் இருக்கும் மக்களை மேலும் வதைக்கும்படி வேலை நிறுத்தம், மனிதச் சங்கிலி என்று நாடகம் போட்டுக்கொண்டிருக்கிறார்.

இது தொடர்பாக அவர் போட்ட நாடகங்களிலேயே மக்களை ரொம்பவும் வெறுப்புக் கொள்ளச் செய்த நாடகம், அவருடைய நான்கு மணி நேர உண்ணாவிரதம்தான். காலையில் நன்றாக இட்லியும் சாம்பாரும் சாப்பிட்டுவிட்டு வந்து கடற்கரையில் படுத்துக்கொண்டு மதிய உணவு வேளை வருவதற்குள் “ராஜபக்சே போரை நிறுத்தி விட்டார்” என்று பொய் சொல்லிவிட்டு லஞ்சுக்கு வீட்டுக்குப் போய்

https://telegram.me/aedahamlibrary

விட்டார்.

இதன் மூலம், இந்த உலகத்திலேயே இப்படி காலை உணவுக்கும், மதிய உணவுக்கும் இடையில் உண்ணாவிரதம் இருந்த ஒரே தலைவர் என்ற அருமையான பட்டத்தைப் பெற்றிருக்கிறார் கருணாநிதி. தி.மு.க.வினரையே மனம் புழுங்க வைத்த சம்பவமாக அமைந்து விட்டது இது. ஆனால் மக்களை வெறுப்பூட்டியது இந்த உண்ணாவிரதம் மட்டும் அல்ல; உண்ணாவிரத நாடகத்தின் போது அவர்கள் டி.வி. சேனலில் பார்த்த காட்சிகள்தான்.

நான்கு மணி நேர உண்ணாவிரதத்தால் களைத்துப்போன முதலமைச்சர் கருணாநிதி கட்டிலில் படுத்திருக்கிறார். தலைமாட்டில் துணைவி; கால்மாட்டில் மனைவி; தமிழ்நாட்டின் ஏழு கோடி மக்களும் இந்தக் கண்றாவியைக் கண்டுகளித்தனர். கருணாநிதி குடும்பத்தின் சன் டி.வி., அவரது கட்சியின் கலைஞர் டி.வி. இரண்டிலும் வரும் சீரியல்களையும் தோற்கடிக்கக்கூடியதாக இருந்தது அந்தக் காட்சி.

மின்வெட்டு, வேலையில்லாத் திண்டாட்டம், சாலை வசதியின்மை, விலைவாசி உயர்வு, இலங்கையில் தமிழர்களின் இனப் படுகொலைக்கு தி.மு.க. சாதிக்கும் கொடூர மௌனம் போன்ற பல பிரச்சினைகளால் கொதித்துக்கொண்டிருந்த மக்கள் இந்தக் குடும்பக் காட்சியைக் கண்டு மேலும் வெறுத்துப் போய்விட்டனர். கருணாநிதியின் அந்த ஒரு உண்ணாவிரதமே தமிழர்களின் ஒட்டுமொத்த வெறுப்பையும் வெளிக்காட்டுவதற்கான சந்தர்ப்பமாக அமைந்து போனது.

இந்த சூழ்நிலையை இதுவரை ஈழப்போராட்டத்தின் தீவிர எதிர்ப்பாளராக இருந்த ஜெயலலிதா வெகு சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டுவிட்டார். ‘நான் பதவிக்கு வந்தால் தனி ஈழம் வாங்கிக் கொடுப்பேன்’ என்று சகலரையும் மிரள வைக்கும் ஒரு அறிவிப்பைக் கொடுத்து கருணாநிதியை மேலும் கதிகலங்க அடித்துவிட்டார் ஜெயலலிதா. அவர் அதைச் செய்வாரா, மாட்டாரா என்பதெல்லாம் கேள்வி அல்ல. இப்போதைக்கு ஈழத் தமிழர்களின் வேதனையால் துயருற்றிருக்கும் தமிழர்களின் அத்தனை ஓட்டும் அவருக்கு வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்துவிட்டார் ஜெ.

இந்த நிலையில் இன்றைய தினம் (6.5.2009) சென்னையில் நடக்க இருந்த சோனியாவின் பொதுக்கூட்டம் ரத்தாகிவிட்டது. இதற்குக் காரணமும் கருணாநிதிதான். ஏற்கனவே சோனியாவின் மீது வன்மத்துடன் இருக்கும் தமிழர்கள் மத்தியில் சோனியாவுடன் ஒரே

https://telegram.me/aedahamlibrary

மேடையில் ஏறினால் தனக்குத் தீராத பழி வந்து சேரும் என்பதைப் புரிந்து கொண்ட கருணாநிதி பொதுக்கூட்டத்துக்கு சில தினங்கள் முன்பே ‘உடம்பு சுகமில்லை’ என்று சொல்லி மருத்துவமனையில் பதுங்கி விட்டார். அதனால் கூட்டத்தையே ரத்து செய்துவிட்டார் சோனியா.

மதுரையில் தி.மு.க.வினர் வாக்காளர்களுக்குப் பணப் பட்டுவாடா செய்வதாக புகார் எழுந்துள்ளது. தமிழக தேர்தல் கமிஷனரும் இது சம்பந்தமாக தில்லிக்கு எழுதி விட்டார். மதுரையில் தேர்தலே ரத்தானாலும் ஆச்சரியமில்லை என்ற நிலை. கருணாநிதியின் புதல்வர் அழகிரி போட்டியிடும் தொகுதி மதுரை.

தி.மு.க, காங்கிரஸ் கூட்டணி பத்து இடங்களையாவது பிடிக்கும் என்ற எதிர்பார்ப்பு இரண்டு மாதங்களுக்கு முன்பு இருந்தது. இப்போதைய நிலையில் ஒரு இடத்தைப் பிடித்தால்கூட அது அதிசயமாகவே இருக்கும்.

06.05.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

# தேசத்தை விற்றவர்கள் (தொடர்ச்சி)

நம் செந்தமிழ் நாட்டில் சமையல் தெரியாதவர்களே சமையல்காரர்களாக இருப்பது போல், அரசியல் பற்றி எதுவுமே தெரியாதவர்கள்தான் அரசியல் வல்லுநர்களாகவும் இருக்கிறார்கள். சமீபத்தில் திருவாளர் சோ இலங்கைப் பிரச்சினை பற்றி ஜெயலலிதாவுக்கு யாரோ தவறாக யோசனை சொல்லி இருக்கிறார்கள் என்றும், இலங்கைப் பிரச்சினை தமிழ்நாட்டுத் தேர்தலில் எந்த பாதிப்பும் செலுத்தாது என்றும் எழுதியிருக்கிறார்.

நாளை முடிவு தெரிந்துவிடும். தி.மு.க. முன்னணி ஒரு சீட்கூட வாங்காது என்று எழுதியிருக்கிறேன். பார்க்கலாம்.

இதற்கிடையில் தேர்தல் பிரச்சாரத்தின் போது மன்மோகன் சிங் ஜெயலலிதாவுக்கு பதில் கூறுகிறேன் பேர்வழி என்று என்னென்னவெல்லாம் உள்ற முடியுமோ அவ்வளவு உளறி இருக்கிறார்.

“நாங்கள் ராஜபக்ஸேவுக்கு offensive ஆயுதமா கொடுத்தோம்? சும்மா defensive ஆயுதம்தானே கொடுத்தோம்?”

இதற்கு ஜெயலலிதாவின் பதிலடி: “ஆயுதத்தில் என்ன அஃபென்ஸிவ், டிஃபென்ஸிவ் எல்லாம்? ஆயுதம் என்றால் ஆயுதம்... அவ்வளவுதானே?”

“இலங்கை ஒரு சுதந்திரமான நாடு என்று ஜெயலலிதாவுக்குத் தெரியாதா? ஒரு சுதந்திரமான நாட்டுக்குள் நம்முடைய ராணுவம் எப்படிப் போக முடியும்? எப்படி ஈழத் தமிழர்களுக்குத் தனிநாடு வாங்கிக் கொடுக்க முடியும்?”

இது மன்மோகன் சிங்கின் வாதம்.

ஜெயலலிதா பதில்: “அப்படியானால் இவருடைய கட்சித் தலைவி இந்திரா காந்தி எப்படி கிழக்குப் பாகிஸ்தானுக்குள் இந்திய ராணுவத்தை அனுப்பி பாங்க்ளாதேஷ் என்ற தனிநாட்டை உருவாக்கிக் கொடுத்தார்?”

இனிமேல் காங்கிரசுக்கு வாய்ப்பே இல்லை. தேர்தல் முடிவுக்குப் பிறகு தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டாலும் ஆச்சரியமில்லை.

https://telegram.me/aedahamlibrary

ஆனால் எனக்கு எது ஆச்சரியமாக இருக்கிறது என்றால், என் நண்பர்களிடம் மூன்று மாதத்திற்கு முன்பே சொன்னேன்; தி.மு.க. கூட்டணி ஓரிரண்டு இடங்களைத்தான் பெற முடியும் என்று. ஆனால் அப்போது என் நண்பர்கள் அதை மறுத்தார்கள். இப்போது மக்களுக்கு கேஸட் (ஈழத் தமிழர்களின் இன்றைய நிலை பற்றிய கேஸட்) கொடுத்துவிட்டதால்தான் தி.மு.க.வுக்கு பிரச்சினை என்கிறார்கள். மூன்று மாதத்திற்கு முன்பே சொன்னேனே, அப்போது கேஸட் கொடுத்தார்களா என்ன?

15.05.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

# தேர்தல் முடிவு

தேர்தல் முடிவு பற்றிய ஹேஷ்யங்கள் தவறாகிவிட்டதை சுட்டிக் காட்டி வாசகர் ஒருவர் எழுதிய கடிதத்துக்கு எழுதப்பட்ட பதில்:

என்னுடைய அனுமானங்கள் தவறாகிவிட்டாலும், என்னைப் பொறுத்தவரை இந்தத் தேர்தல் முடிவில் சில சந்தோஷங்கள்:

பா.ம.க.வுக்கு விழுந்த அடி, சிரஞ்சீவி, விஜயகாந்த் போன்றோருக்குக் கிடைத்த வாக்குகள். விஜயகாந்த் வேட்பாளர்கள் அனைவருக்கும் டெபாசிட் போய்விட்டது. ஆனால், விஜயகாந்தை ஜெயலலிதா தன்னோடு சேர்த்துக்கொண்டிருந்தால் அ.தி.மு.க. கூட்டணியே வெற்றி பெற்றிருக்கும். பல தொகுதிகளில் விஜயகாந்த் வாக்குகளை அ.தி.மு.க.வோடு சேர்த்தால் தி.மு.க. வேட்பாளருக்குக் கிடைத்த வாக்குகளோடு அதிகமாக இருக்கின்றன.

அடுத்த விஷயம், பாரதீய ஜனதாவின் தோல்வி. காங்கிரஸ் திரும்பவும் ஆட்சி அமைக்கக் கூடாது என்று நினைத்தேனே தவிர, காங்கிரஸுக்கு மாற்று பா.ஜ.க. அல்ல என்பதில் எந்தச் சந்தேகமும் எனக்கு இருக்கவில்லை. பா.ஜ.க. வந்திருந்தால் இந்தியா முழுவதையுமே ரத்தக்களறி ஆக்கியிருப்பார்கள். குஜராத்தில் 2000 முஸ்லீம்களைப் படுகொலை செய்த நரேந்திர மோடியை பிரதமராக முன்னிறுத்தியதே பா.ஜ.வின் தோல்விக்குக் காரணம். அதிலும் வருண் காந்தி என்ற மத வெறியரை -- முஸ்லீம்களின் மேல் இவ்வளவு பச்சையாக, வெளிப்படையாக வெறுப்பை உமிழ்ந்த ஒருவரை - பா.ஜ. கண்டு கண்டிக்கவில்லை என்பதோடு அவரை அரவணைத்தும் சென்றது அக்கட்சியின் உண்மையான நிறத்தை மக்களுக்குக் காட்டியிருக்கும். காங்கிரஸ் ஆட்சியில் சோறு தண்ணி கிடைக்காவிட்டாலும் உயிராவது பிழைத்திருக்கலாம். பா.ஜ.க.வின் ஆட்சியில் அதற்கும் உத்தரவாதம் இல்லை.

மற்றபடி, தமிழ்நாட்டு மக்கள் ஈழத்தில் நடக்கும் படுகொலைகளைப் பற்றிக் கொஞ்சம் ஈரம் காட்டுவார்கள் என்று நினைத்துவிட்டேன். தமிழர்களுக்கு சினிமா தவிர வேறு எதிலும் அக்கறை இல்லை என்று மீண்டும் நிரூபித்துவிட்டனர். நல்ல ஜனங்கள்.

18.05.2009

https://telegram.me/aedahamlibrary

# வன்முறையின் தோல்வி

1919இல் அறிமுகப்படுத்தப்பட்ட ரௌலட் சட்டத்தையும், பிரிட்டிஷ் ஆட்சியையும் எதிர்த்து 1920-21இல் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினார் காந்தி. சத்யாக்ரக முறையில் நாடு முழுதும் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. அச்சமயத்தில் 1922 ஃபெப்ருவரி 4ஆம் தேதி அன்று உத்தரப் பிரதேசத்தில் சௌரி சௌரா என்ற ஊரில் ஒரு மதுபானக் கடையின் எதிரில் 2000 பேர் கொண்ட போராட்டக்காரர்கள் திரள்கிறார்கள். கடையை மூடச்சொல்லி கோஷமிடுகிறார்கள். போலீஸ் வருகிறது. மக்களைக் கலைந்து போகச் சொல்லி வானை நோக்கிச் சுடுகிறது. ஆனால் மக்கள் கலைந்து செல்வதற்கு பதிலாக போலீஸை நோக்கிக் கற்களை வீசி எறிகிறார்கள். இனியும் பொறுத்தால் ஆபத்து என்பதை உணரும் இன்ஸ்பெக்டர் மக்களை நோக்கி சுடச் சொல்லி உத்தரவிடுகிறார். துப்பாக்கிச் சூட்டில் மூன்று போராட்டக்காரர்கள் சாகிறார்கள். பலர் காயமடைகிறார்கள். உடனே போராட்டக்காரர்கள் மேலும் கொந்தளிப்பாகி போலீஸை நோக்கிக் கற்களை வீசுகிறார்கள்.

ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டம் தங்களை நோக்கி முன்னேறு-வதைக் கண்ட போலீஸ்காரர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குள் சென்று ஒளிந்துகொள்ள, போராட்டக்காரர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குத் தீ வைக்கிறார்கள்.

துப்பாக்கிச் சூட்டுக்கு உத்தரவிட்ட இன்ஸ்பெக்டர் உட்பட 22 போலீஸ்காரர்கள் உயிரோடு எரிக்கப்படுகிறார்கள்.

அடுத்த நாளே காந்தி ஒத்துழையாமை இயக்கதைக் கைவிடுகிறார். 22 போலீஸ்காரர்கள் இறந்ததற்குத் தானே பொறுப்பு என்று பிரகடனப்படுத்துகிறார். போராட்டக்-காரர்களை சரியான முறையில் போராட்டத்துக்குத் தயார் செய்யாமல் மிக அவசர கதியில் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்துவிட்டதாகக் கூறி உண்ணாவிரதத்தைத் தொடங்குகிறார். காலை ஏழு மணியிலிருந்து

https://telegram.me/aedahamlibrary

முற்பகல் பதினோரு மணி வரை நான்கு மணி நேரம் உண்ணாவிரதம் இருக்கும் தலைவர்களைக் கொண்ட காலகட்டம் இது. ஆனால் காந்தி ஐந்து தினங்கள் உண்ணாவிரதம் இருந்தார்.

அந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பிரிட்டிஷார் 172 போராட்டக்-காரர்களைக் கைது செய்தனர். அடுத்த ஆண்டே இலஹாபாத் நீதிமன்றம் 19 பேருக்கு தூக்குத் தண்டனை அளித்தது. 113 பேருக்கு ஆயுள் தண்டனையிலிருந்து 2 ஆண்டு தண்டனை வரை விதிக்கப்பட்டது.

இப்போது பல தமிழ்நாட்டுத் தலைவர்கள் பகத் சிங் மற்றும் சுபாஷ் சந்திர போஸ் ஆகியோரின் வழிதான் சரியானது என்று பேசி மக்களை வன்முறையின் பக்கம் திருப்பி விட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் 1922, ஃபெப்ருவரி 4ஆம் தேதி அன்று நடந்த சம்பவத்தால் உணர்ச்சிவசப்பட்டு காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை இன்னும் தொடர்ந்திருந்தால் அவருடைய போராட்டம் அஹிம்சை வழியிலிருந்து பிறழ்ந்து ஆயுதப் போராட்டமாக மாறியிருக்கும். பிரிட்டிஷ்காரர்களும் ராணுவத்தை முழு அளவில் இறக்கி மக்களைக். கொன்று குவித்திருப்பார்கள். இந்தியாவில் ரத்த ஆறு ஓடியிருக்கும். போராடுபவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர்கள் அல்ல; பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தியிருக்கும் உலக நாடுகள்.

ஆயிரக்கணக்கில் மக்களைப் பலி கொடுத்து அவர்களின் பிரேதக் குவியலின் மீது ஒரு தேசத்தின் சுயராஜ்யத்தை நிறுவுவதா என்று கேட்டார் காந்தி. அவர் செய்தது கோழைத்தனம் அல்ல. அவர் செய்ததுதான் வீரம். துப்பாக்கியை எடுத்துச் சுடுவதல்ல வீரம். துப்பாக்கியை எடுக்க வேண்டிய உணர்ச்சிகரமான சூழலில் சாத்வீகத்தைக் கடைப்பிடிக்கும் மன உறுதி கொண்டிருப்பதே வீரம். எதிரியிடம் தவறு கண்டுபிடிப்பதல்ல வீரம். தன்னை சுய பரிசோதனை செய்து கொள்வதே வீரம். எதிரியைத் தண்டிப்பதல்ல வீரம். அதை யார் வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் தன் தவறை உணர்ந்து தன்னை தண்டித்துக்கொள்ளும் மன உறுதி கொள்வதே வீரம்.

காந்தி அஹிம்சையைத்தான் போதித்தார். ஆனால் அவர் கோழை அல்ல; மிகக் கடுமையான நெஞ்சுரம் மிக்கவர். துப்பாக்கி நெற்றிப் பொட்டில் வைக்கப்பட்டபோதும் கண்களை இமைக்காத துணிவு கொண்டவர் காந்தி. அவர் மக்களை நேசித்தார். ஒரு சுதந்திரமான தேசத்துக்காக பல்லாயிரக் கணக்கான மக்களை அவர் பலி கொடுக்க விரும்பவில்லை. அதே காரணத்தினால்தான் பாகிஸ்தான் என்ற பகுதி இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட வேண்டும் என்ற நிலை வந்த போது

https://telegram.me/aedahamlibrary

அதற்கு ஒப்புக்கொண்டார். இன்றைய தினம் காந்தி உயிரோடு இருந்திருந்தால் காஷ்மீரும் பிரிந்து செல்வதை அனுமதித்திருப்பார்.

“தினம் தினம் ராணுவத்தினராலும், போராளிகளாலும் இந்தப் பகுதியில் மக்கள் செத்து மடிந்து கொண்டிருக்கும் நிலையில் எதற்காக காஷ்மீர் என்ற அந்த நிலத்தை நாம் வைத்துக் கொண்டிருக்க வேண்டும்?” என்பதே அவருடைய கேள்வியாக இருக்கும்.

ஒட்டுமொத்த மக்களையும் பலி கொடுத்துவிட்டு எதற்காகத் தனிநாடு? நாட்டுக்காக மக்களா, மக்களுக்காக நாடா? இதுதான் காந்தி அடிக்கடி கேட்ட கேள்வி.

இப்போது சுபாஷ் சந்திர போஸை கொண்டாடும் தமிழகத் தலைவர்களிடம் நான் கேட்க விரும்பும் கேள்வி இதுதான்: நேதாஜி சாதித்தது என்ன? ஒரு அந்நிய தேசத்தில் இந்திய தேசிய ராணுவத்தை அமைத்தார். ஹிட்லரோடும் முஸோலினியோடும் கூட்டு சேர்ந்தார். பல லட்சம் பேரைக் கொன்று குவித்த ஒரு ஃபாஸிஸ்டோடு கூட்டு சேர்ந்து அடையப் போகும் சுதந்திரத்தின் மூலம் எம்மாதிரியான மக்களை உருவாக்க முடியும்? அப்படி உருவாக்கப்பட்ட தேசம் எப்படி இருக்கும்? வன்முறையின் அஸ்திவாரத்தில் அமைக்கப்பட்ட இஸ்ரேல் இன்றும் பாலஸ்தீனியர்களின் ரத்தக்கறை படிந்த தேசமாகத்தானே கருதப்படுகிறது?

ஆயுதப் போராட்டத்தின் மூலம் எந்த நாடு சுதந்திரம் அடைந்திருக்கிறது? ரஷ்யப் புரட்சியிலிருந்தே ஆரம்பிக்கலாம். அப்போதைய ரஷ்யா ஜாரின் குடும்பத்தினரிடமும், சில அதிகாரிகளிடமும், தேவ சபையிடமும்தான் இருந்தது. அந்த தேசத்தின் நிலம் முழுவதும் இந்த மூன்று பிரிவினரின் ஆதிக்கத்தில் இருந்தது. மக்கள் அடிமைகளாய் வேலை செய்து பட்டினியால் செத்துக்கொண்டிருந்தார்கள். எல்லாவற்றையும் கோர்க்கியின் தாய் நாவலில் படித்திருக்கிறோம். இப்படி, இழப்பதற்குத் தங்கள் உயிரைத் தவிர வேறு எதுவுமே இல்லாதவர்கள்தான் ஆயுதப் போராட்டத்தைக் கையில் எடுக்க முடியும். வாழ்வதற்கான நம்பிக்கையையே முற்றாக இழந்து போகும் நிலையில்தான் அது சாத்தியம். ஆனால், இப்போதய உலகம் அப்படியா இருக்கிறது?

ஆயுதப் புரட்சியின் மூலம் கூபா சுதந்திரம் அடைந்திருக்கலாம். ஆனால் அதில் ஒரு பிரச்சினை இருக்கிறது. கூபப் பிரஜைகளை சுதந்திரமாக விட்டால் 90 சதவிகிதம் பேர் நாட்டை விட்டுச் சென்று விடுவார்கள்.

தகவல் தொழில்நுட்பம் நம்ப முடியாத அளவுக்கு வளர்ந்து விட்ட இன்றைய காலகட்டத்தில் கெரில்லா யுத்த முறைக்கு சாத்தியமே

https://telegram.me/aedahamlibrary

இல்லை. மேலும், மக்களுக்கு ஆயுதத்தை எடுப்பதில் விருப்பம் இல்லை. நேதாஜி, பகத் சிங் என்று சொல்லிக்கொண்டு ஒன்றிரண்டு பேர் இருக்கலாம். ஆனால் அவர்கள் ஒட்டு மொத்த மனித சமூகத்தின் பிரதிநிதிகள் அல்ல.

சதாம் உசேன் அமெரிக்காவை எதிர்த்தார். கடாஃபியும் எதிர்த்தார். ஆனால் சதாம் அமெரிக்காவை விளிம்புக்குத் தள்ளினார். அதையேதான் தாலிபான்களும் செய்தனர். இப்போது ஈராக், ஆஃப்கன் என்ற இரண்டு தேசங்களுமே காணாமல் போய்விட்டன. இதுவா சுதந்திரம்? இதுவா தனிநாடு?

சதாம் ஒரு நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தவர். அந்த தேசத்தின் வலிமையான ராணுவமே அவர் கையில் இருந்தது. மக்கள் அவர் பக்கம். விதவிதமான ஆயுதங்கள். இவ்வளவு இருந்தும் அமெரிக்காவை எதிர்க்க முடியவில்லை. ஒரு மண்குழிக்குள் பதுங்கி வாழ்ந்து, அமெரிக்க சிப்பாய்களிடம் சிக்கி, மரண தண்டனை விதிக்கப்பட்டு செத்தார். சதாம் உசேனுக்கே அந்த நிலை என்றால் ஒரு மிகச் சிறிய கெரில்லா இயக்கம் எப்படி ஸ்ரீலங்கா, இந்தியா, சீனா முதலிய பல நாடுகளின் ராணுவத்தைச் சமாளிக்க முடியும்? இப்படிப்பட்ட சூழலில் ஆயுதத்தைக் கையில் எடுப்பது தற்கொலைக்குச் சமம் அல்லவா?

கடந்த முப்பது ஆண்டுகளாக அப்படிப்பட்ட தற்கொலைகளும் கொலைகளும்தான் நடந்து கொண்டிருந்தன. மூத்த தலைவர் அமிர்தலிங்கத்திலிருந்து ஆரம்பித்து அத்தனை சக போராட்டக் குழுவினரும் புலிகளால் அழிக்கப்பட்டனர். சிறுவர்களெல்லாம் ஆயுதப் போராட்டத்தில் வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தப்பட்டனர். இயக்கத்தை விமர்சிப்பவர்கள் அழித்தொழிக்கப்பட்டனர். இலங்கை ராணுவத்தில் இருந்தது போலவே சித்ரவதைக் கொட்டடிகள் அமைக்கப்பட்டு இயக்கத்தை எதிர்த்தவர்களும், எதிர்த்ததாக சந்தேக நிழல் படிந்தவர்களும் சித்ரவதை செய்யப்பட்டனர். ஒருசில முஸ்லீம்கள் அரசுக்கு உளவு சொல்லிவிட்டார்கள் என்ற காரணத்தால் ஒரு லட்சம் முஸ்லீம்கள் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரே நாளில் அவர்களுடைய வாழ்விடங்களை விட்டு வேறோர் இடத்துக்குத் துரத்தியடிக்கப்பட்டனர். இப்படி ஒரு பட்டியலிட்டால் அது பக்கம் பக்கமாக நீளும். இதன் காரணமாக, உலகம் முழுவதும் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் ஸ்ரீலங்காவின் நிலப்பரப்பில் நான்கில் ஒரு பங்கைத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருந்த புலிகள் இப்போது முழுமையாக அழிக்கப்பட்டதற்குக் காரணங்கள் என்ன?

https://telegram.me/aedahamlibrary

புலித் தலைவர் அங்குள்ள யதார்த்தத்தையும், மாறிவிட்ட அரசியல் சூழலையும் புரிந்து கொள்ளவில்லை. ஆறு மாதத்திற்கு முன்பு கூட புலிகளை பேச்சு வார்த்தைக்கு அழைத்தது இலங்கை அரசு. புலிகள் அதை சட்டை செய்யவில்லை.

அதன் விளைவாக இன்று புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த அத்தனை பேரும் கொல்லப்பட்டுவிட்டார்கள். பிரபாகரனின் மரணத்தில் ஏகப்பட்ட கேள்விகளும் சந்தேகங்களும் சொல்லப் படாத சேதிகளும் உள்ளன. போர்க்களத்தில் நின்று போரிட்டுக்-கொண்டிருக்கும் ஒரு கெரில்லா போராளி இவ்வளவு சீராக முகச்சவரம் செய்துகொண்டிருப்பது ஏன்? அப்படியானால், அவர் சரணடைந்த பிறகு கொல்லப்பட்டாரா? அவருடைய பின்னந்தலையில் காணப்படும் வெட்டுக் காயம் இந்த சந்தேகத்தை உறுதி செய்கிறது.

இலங்கை அரசு புலிகளை ஆறு மாதத்திற்கு முன்புகூட பேச்சு வார்த்தைக்கு அழைத்தும் புலிகள் அதை நிராகரித்ததால் ஏற்பட்டிருக்கும் பேரழிவுகள் கொஞ்ச நஞ்சமல்ல. புலிகளின் ஆதரவு இணையதளமான ‘புதின’த்தில் மே 19 அன்று அதன் செய்தியாளர் செய்மதி தொலைபேசியில் கூறியிருக்கும் செய்தி கீழே வருவது:

“புலிகளிடமிருந்து எதிர்த் தாக்குதல் இல்லாத நிலையிலும் இலங்கை ராணுவம் தாக்குதல் நடத்தியதால் கடந்த நான்கு நாட்களில் மட்டும் 4000க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். திரும்பிய பக்கமெல்லாம் பிணக்குவியல்களே உள்ளன. இறந்தவர்களின் உடல்கள் அகற்றப்படாததால் அந்தப் பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுகிறது. படு மோசமான காயங்களுக்கு உள்ளாகி, சிகிச்சையளிக்க எந்த வழியுமற்ற நிலையில் கதறும் பொதுமக்கள், அங்கே இருக்கும் போராளிகளிடம் தங்களைச் சுட்டுக் கொன்று விடுமாறு மன்றாடுகின்றனர். அதேபோல், காயமடைந்து சிகிச்சைக்கு வழியில்லாமல் இருக்கும் போராளிகள் தங்களுக்கு சயனைடு கொடுக்குமாறு கதறுகின்றனர். பதுங்கு குழிகளுக்குள் இருக்கும்போதே கொல்லப்பட்ட மக்களின் சடலங்களுக்கு மேலேயே, உயிரோடு இருப்பவர்கள் பாதுகாப்புக்காகப் பதுங்க வேண்டிய அவலம் நிலவுகிறது.”

இந்த அவலத்திற்குக் காரணம் ராஜபக்சே மட்டும்தான் என்று கூறினால் அது நியாயமாக இருக்காது. புலிகள் தேர்ந்தெடுத்த வழிமுறையும் இதற்குக் காரணம். குறைந்தபட்சம் ஆறு மாதத்திற்கு முன்னால் பேச்சு வார்த்தையை நிராகரிக்காமல் இருந்திருந்தால் இன்று ஈழம் ஒரு சுயாட்சி கொண்ட மாகாணமாகவாவது உருவாகியிருக்கும்.

https://telegram.me/aedahamlibrary

ராஜபக்சே ஒரு இனவாதி என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அவர் ஒரு நவீன ஹிட்லர். ஆனால் இப்போதைய நிலையில் தமிழர்களுக்கு மறு வாழ்வும், சம உரிமையும் அளிக்க இந்தியா போன்ற நாடுகள் அவரை நிர்ப்பந்திக்க வேண்டும். ஏனென்றால், இந்தியாவின் ராணுவ உதவி இல்லாவிடில் அவர்கள் புலிகளை அழித்திருக்க முடியாது.

ஸ்ரீலங்காவின் வட பகுதியான யாழ்ப்பாணம் போரின் காரணமாக பல ஆண்டுகளாகவே மின்சாரம், பெட்ரோல், மருத்துவ வசதி, பாடசாலைகள் என்று எந்த வசதியும் இல்லாமல் மனிதர்கள் வாழவே லாயக்கற்ற பகுதியாக இருந்து வந்திருக்கிறது. இப்போது நடந்த தீவிரமான போரினால் அந்தப் பகுதி முற்றிலுமாக அழிந்து ஆஃப்கனிஸ்தானைப் போல் காட்சியளிக்கிறது. இங்கே தமிழர்கள் மீண்டும் 30 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தது போல் அமைதியாக வாழ ராஜபக்சே வழி வகுத்துக் கொடுக்க வேண்டும். இதற்கும் அவரை உலக நாடுகள் நிர்ப்பந்திக்க வேண்டும்.

போராளிகளும் இனிமேல் ஆயுதங்களைப் போட்டுவிட்டு, சாத்வீகமான முறையில் சம உரிமைக்காகப் பாடுபட வேண்டும். நிச்சயமாக அது கோழைத்தனம் அல்ல. வரலாற்றில் சற்று பின்னே செல்வோம். இடம் லாகூர். அக்டோபர் 30, 1928. சைமன் கமிஷனை எதிர்த்து லாலா லஜபதி ராய் ஊர்வலம் சென்று கொண்டிருக்கிறார். அவருடன் செல்வது பண்டிட் மதன் மோகன் மாளவியா. போலீஸின் லத்தி லஜபதி ராயின் மார்பில் பாய்கிறது. அன்றைய தினம் மாலை நடந்த பொதுக்கூட்டத்தில் லாலா லஜபதி ராய் பேசினார்: “என் உடம்பில் படும் ஒவ்வொரு லத்தி அடியும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சவப்பெட்டியின் மீது அடிக்கப்படும் ஆணி.” அன்றைய தினம் வாங்கிய அடியினால்தான் பின்னர் நவம்பர் 17, 1928 அன்று லாலா லஜபதி ராய் இறந்தார்.

இந்த நெஞ்சுரமும் துணிவும்தான் அகிம்சை வழியிலான சத்தியாக்ரகப் போராட்டத்தின் ஆணிவேர்.

மே 2009

https://telegram.me/aedahamlibrary

# அவரவர் பாதை; அவரவர் ஓட்டம்

அன்புள்ள சாரு,

உங்களின் ‘வன்முறையின் தோல்வி’ கட்டுரை நன்றாக இருந்தது. கருத்தியல் தளத்தில் கிட்டத்தட்ட இதேபோன்ற ஒற்றுமையை உடைய கட்டுரை ஒன்றை ஜெயமோகனும் சமீபத்தில் எழுதியிருந்தார்.

காந்தியைப் பற்றி முன்னர் நீங்கள் பதிவு செய்தது உங்களுக்கும், வாசகர்களுக்கும் நினைவில் இருக்கும் என்று நினைக்கிறேன். ஒருமுறை நீங்கள் அறுவை சிகிச்சை முடித்து ஆஸ்பத்திரியில் இருந்த போது ஜெயமோகனிடம் இருந்து வந்த குறுஞ்செய்தி பற்றி எழுதியிருந்தீர்கள். ‘வலி’ குறித்து அவர் அனுப்பிய செய்தியில் பொதிந்திருந்த ‘காந்திய, சுயவதையை’ முன்வைத்து நீங்கள் கோபமாக எழுதியிருந்ததைப் படித்த ஞாபகம். இதன் மறுமுனையான ‘பின்நவீனத்துவ கொண்டாட்ட வெளி’ பற்றி எழுதி, இதுவே உங்கள் இருவருக்கும் உள்ள ஆதாரமான வேறுபாடு என்றும் கூறியிருந்தீர்கள்.

முன்னர் பதிவு செய்ததற்கும், இப்பொழுது நீங்கள் எழுதிய கட்டுரைக்கும் நிறைய மாறுதல்கள் தென்படுகின்றன. கருத்துக்கள், சிந்தனைகள், நம்பிக்கைகள் மாறலாம். மாற வேண்டும். அதையெல்லாம் ‘உள் முரண்பாடு’ என்று கூறி இம்சைப்படுத்தப் போவதில்லை. இப்பொழுதும்கூட உங்களுக்கு காந்தியின் பாலியல் மற்றும் ஒழுக்க நெறிகளின் மீது எதிர்மறைக் கருத்துக்கள் இருக்கலாம்.

என்னுடைய கேள்வி நேரடியானது. ஒரு அறிவுஜீவி தனது கருத்துக்களை உற்பத்தி செய்கிறான். அதை எழுத்திலும், பேச்சிலும் வடிக்கிறான். தன் கருத்துக்களை முன்வைக்கிறான். பின்னர் அவன் நிலைப்பாடுகள் மாறுகின்றன, அதை முன்வைத்தபடி அவன் போய்க் கொண்டே இருக்கிறான். ஆனால் அதுவரை அவனைத் தொடர்ந்து கொண்டே ஓடி வந்த சாதாரண மனிதனின் நிலைதான் என்ன? அவனும் தர்க்கபூர்வமாக சிந்தித்து, சமநிலையான முடிவை எடுக்க வேண்டும் என்று எளிதாகக் கூறிவிட முடியுமா? தூண்டப்பட்டது அவனது உணர்ச்சியல்லவா? அதை அவ்வளவு சீக்கிரம் அமைதிப்படுத்திவிட முடியுமா? அவனுக்கு அதுவரையில் கருத்துக்களாகப் போர்த்தப்பட்டதெல்லாம் ஒரு அடையாளமல்லவா? அதை அவ்வளவு

https://telegram.me/aedahamlibrary

சீக்கிரம் தூக்கித் தூர எறிந்துவிடத்தான் முடியுமா? அறிவுஜீவி போய்க்கொண்டே இருப்பான். அழிவதென்னவோ சாமான்ய மனிதன்தானா? பின்னர் அவனையும் ஒரு பெட்டிக்குள் போட்டு, ‘சிம்பு படத்துக்குப் போய் விசில் அடிக்றானே... என்னா ஒரு கலாச்சார வறச்ச்ச்சி’ என்று கூறி போய்க்கொண்டே இருப்பீர்களா?

அன்புடன்,

அரவிந்த்.

அன்புள்ள அரவிந்த்,

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நான் வேறு; இப்போதைய நான் வேறு. சரி. என்னைத் தொடர்ந்து ஓடி வந்த சராசரி மனிதனின் கதி என்ன ஆவது?

பாருங்கள் அரவிந்த். நான் ஒரு கெரில்லா போராளி. என்னுடைய படைகளை யுத்தத்துக்கு அனுப்புகிறேன். எல்லாமே தற்கொலைப் படை. தற்கொலைப் படை என்பதால் எதிரிப் பக்கத்தில் பேரழிவு. ஆனால் எதிரியும் சளைப்பதாகத் தெரியவில்லை. தொடர்ந்து துருப்புகளை அனுப்பிக்கொண்டே இருக்கிறான். நானும் தொடர்ந்து என்னுடைய தற்கொலைப் படைகளை அனுப்பிக்கொண்டே இருக்கிறேன்.

ஒரு கட்டத்தில் எதிரியின் பலம் கூடி அவன் என்னையும் என்னுடைய நெருங்கிய சகாக்களையும் சூழ்ந்து கொள்கிறான். எனக்குத் தப்பிக்க வழியில்லை. வெள்ளைக் கொடியைப் பிடித்துக்கொண்டு சமாதானம் பேசச் செல்கிறேன். சர்வதேச யுத்த நியதிகளை மீறி எதிரி என்னைக் கொன்றுவிடுகிறான். இது ஒரு காட்சி.

இதற்கு மாறாக, என்னைப் பின் தொடர்ந்து வராதீர்கள் என்று சொல்லிக்கொண்டே ஓடுகிறேன் நான். என்னை மட்டும் அல்ல; யாரையும் பின் தொடர்ந்து ஓடாதீர்கள் என்பதே என் செய்தி. உங்களுடைய கல்விச் சாலைகள், மத குருமார்கள், பெரியோர், பெற்றோர், சமூக அறம் காக்கும் வாட்ச்மேன்கள் போன்ற யாருடைய பேச்சையும் கேட்காமல் உங்களுடைய சுய சிந்தனையையும், அறிவையும் கொண்டு செயல்படுங்கள் என்பதே என் எழுத்தின் அடிநாதம்.

நான் உங்களுக்கு அளிப்பது சிந்தனைகள் அல்ல; சிந்தனா முறை. அந்த சிந்தனாமுறையின் நோக்கம் சுதந்திரம். இந்த உலகம் முழுவதும் உங்களை ‘பின்பற்றச்’ சொல்கிறது. ஒரு மதவாதியை, ஒரு கடவுளை,

https://telegram.me/aedahamlibrary

ஒரு சிந்தனையாளனை, ஒரு தத்துவத்தை, ஒரு அரசியல் கோட்பாட்டை. இப்படி ஏதோ ஒன்றை உங்கள் முன்னே வைத்து ‘அதைப் பின்பற்று’ என்று உங்களிடம் சொல்லிக்கொண்டே இருக்கிறது சமூகம். ஆனால் நான் யாரையும், எதையும் பின்பற்றாதீர்கள்; உங்களை நம்புங்கள்; உங்களைப் பாருங்கள்; உங்கள் மனதைத் தொடர்ந்து செல்லுங்கள்; எந்தச் சிந்தனையும், கோட்பாடும், தத்துவமும், அறநெறியும், போதனையும், சட்ட திட்டமும், ஒழுக்கப் பார்வைகளும் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்த விடாதீர்கள் என்கிறேன். இதுவே என் எழுத்தின் செய்தி.

உங்கள் பாதையை நீங்கள் மட்டுமே தேர்ந்தெடுக்க வேண்டும். அதுவே சுதந்திரம். அதுவே பரவசம்.

26.05.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

# Twitter turns bitter

இந்திய வெளியுறவுத் துறை இணையமைச்சரான சஷி தரூரிடம் ட்விட்டரில் ஒரு வாசகர் “கேட்டில் க்ளாஸில் பயணம் செய்வீர்களா?” என்று கேட்டதற்கு அவர் Absolutely, in cattle class out of solidarity with all our holy cows!” என்று பதில் கூறியது இந்தியா முழுவதும் அதிர்வலைகளை எழுப்பியிருக்கிறது. விமானத்தில் இகானமி வகுப்பை உலகம் பூராவுமே கேட்டில் க்ளாஸ் என்றுதான் அழைப்பார்கள் என்பது நம்முடைய அரசியல்வாதிகளுக்குத் தெரியாத காரணத்தால் சஷி தரூரின் வாசகம் பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. பொதுவாகவே இந்தியர்களுக்கு நகைச்சுவை உணர்வு கம்மி என்பது எல்லோரும் அறிந்த விஷயம். அதிலும் இந்திய அரசியல், கிழவர்களால் நிரம்பியது. இவர்களுக்கு ட்விட்டர் பற்றியோ அதில் சஷி தரூர் பதிந்த கிண்டலான காமெண்ட் பற்றியோ என்ன தெரியும்?

மின்சாரம் என்ற கண்டுபிடிப்பு மனித வாழ்வை எந்த அள வுக்கு மாற்றியமைத்ததோ அதே போன்ற மாறுதல்களைச் செய்த ஒரு கண்டுபிடிப்பு கணினி. பின்னர் அதைத் தொடர்ந்து வந்தது இண்டெர்நெட் வசதி. தகவல் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட இந்தப் புரட்சிகரமான கண்டுபிடிப்புகள் இதுவரை மனித வரலாற்றில் இருந்திராத அளவுக்கு மனித வாழ்வை பாதிப்பதாக இருந்தன.

இண்டெர்நெட்டில் இணையதளம், வலைமனை போன்றவற்றின் மூலமாக உலகளாவிய முறையில் தகவல் பரிமாற்றங்கள் நடந்தன. ஒருவருடைய எழுத்தோ பேச்சோ கண்ணிமைக்கும் நேரத்தில் உலக வாசகர்களைச் சென்றடந்தது. இதன் பரிணாம வளர்ச்சியாக ஏற்பட்டதுதான் social networking sites. இளைஞர்களிடையே வெகு சீக்கிரத்தில் பிரபலமடைந்த இந்த சமூகக் குழுக்களில் முதல் முதலாக அறிமுகமானது ஆர்க்குட். இதை அடுத்து வந்து பிரபலமானது ஃபேஸ்புக். இது ஆர்க்குட்டை விட நவீனமாகவும் பல விளையாட்டுகளைக் கொண்டதாகவும் இருந்தது.

https://telegram.me/aedahamlibrary

இந்த சமூகத் தளங்கள் மூலம் பலருக்கும் தங்களுடைய தனிமையிலிருந்து விடுதலை கிடைத்தது. உலகம் பூராவும் தங்களுக்கான நண்பர்களை அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். சந்தித்துக் கொண்டார்கள்.

எந்த ஒரு விஷயமுமே அதன் சாதகங்களோடு சிலபல பாதகமான அம்சங்களையும் கொண்டிருப்பது போலவே இந்த சமூகத் தளங்களிலும் நிகழ்ந்தது. ஒருவரை ஒருவர் நன்கு அறிந்துகொள்ளாமலேயே நேரில் சந்தித்து, செக்ஸ் வைத்துக்கொண்டு, பின்னர் பிரிந்தார்கள். இந்தப் பிரிவு பல சமயங்களில் கொலை வரை போய் முடிந்தது.

இன்னும் பல விபரீதங்களும் நடந்தன. பெண்கள் தங்களுடைய புகைப்படங்களை சமூகக் குழுத் தளங்களில் வெளியிட அதை எடுத்து ஆபாசமான முறையில் பயன்படுத்தும் கிரிமினல்கள் பெருகினர். இந்தப் பிரச்சினையில் மாட்டிக்கொண்டவர்களில் சிதார் மேதை ரவி ஷங்கரின் மகள் அனுஷ்காவும் அடக்கம்.

உண்மையில் சொல்லப் போனால் சமூக எதார்த்தம் பற்றி எதுவும் தெரியாத கல்லூரி மாணவிகள் இதனால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகிறார்கள். சைபர் கிரிமினல்களைக் கண்காணிப்-பதற்குப் போதுமான பலமும், நுணுக்கங்களும் போலீஸ் துறையிடம் இல்லை. இதனால் சைபர் கிரிமினல்கள் இதுபோன்ற இணைய தளங்களில் சர்வ சுதந்திரமாக நடமாடுகிறார்கள். ஒரு கல்லூரி மாணவி தன் காதலனுடன் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை பதிவேற்றம் செய்ய அது பலவிதமாகப் பயன்படுத்தப்பட்டு அந்த மாணவியும், அவளுடைய பெற்றோரும் மிகப் பெரிய மன உளைச்சலுக்கு உள்ளானார்கள்.

இதில் காவல் துறையின் உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருப்-பதை விட நாமே கவனமாக இருப்பது மட்டுமே இந்த மாணவி-களுக்கு இத்தகைய பிரச்சினைகளிலிருந்து விலகி இருப்பதற்கும் தவிர்ப்பதற்கும் சரியான உபாயமாக இருக்கும். இதில் வெளியே சொல்லப்படாத, இன்னும் ஊடகங்களின் கவனத்துக்கு வராத நூற்றுக்கணக்கான சோகக் கதைகள் இருக்கின்றன.

இப்படிப்பட்ட சோகக் கதைகளுக்கு நடுவே சில வேடிக்கையான சம்பவங்களும் நடப்பதுண்டு. ஒரு கல்லூரி மாணவி தன்னுடைய புகைப்படத்தை வெளியிடாமல், தன் அடையாளத்தையும் பெயரையும் மாற்றிக் கொண்டு ஒரு சமூகத் தளத்தில் உறுப்பினராகச் சேர்ந்தாள். பிறகு, தன் சக உறுப்பினர்களோடு தன் கல்லூரிப் பேராசிரியரைப்

https://telegram.me/aedahamlibrary

பற்றித் தாறுமாறாக புகார் சொல்லி அசிங்கமாகத் திட்டி என்னென்னவோ பகிர்ந்துகொண்டாள். கடைசியில் பார்த்தால் அந்தப் பேராசிரியரும் அதே சமூகக் குழுவில் உறுப்பினர். மாணவியும் யார் என்று தெரிந்து போயிற்று. அந்த மாணவியின் நிலையை நினைத்துப் பாருங்கள்! ஒரு நாகரீகமான பெண் இவ்வளவு அசிங்கமாகப் பேசுவாளா என்று கல்லூரி பூராவும் விஷயம் பரவி அவள் அந்தக் கல்லூரியை விட்டே விலகும்படி ஆயிற்று.

அடையாளம் இல்லாமல் எழுதலாம் என்ற சுதந்திரம் சமயங்களில் கழிப்பறை சுவர்களில் நாம் காணக்கூடிய 'சுதந்திரமான எழுத்து' அளவுக்குக் கொண்டுபோய் விடுவதையும் சமூகக் குழுத் தளங்களில் அடிக்கடி எதிர்கொள்ள நேர்கிறது.

இப்படிப்பட்ட பாதகமான அம்சங்கள் சில இருந்தாலும் இணைய தள சமூகக் குழுக்களால் ஏற்பட்டிருக்கும் சாதகமான அம்சங்களை அளவிட்டுக் கூற முடியாது. உதாரணமாக, நாம் இதன் மூலம் நம்முடைய பால்ய நண்பர் ஒருவரை அவர் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் கண்டு பிடித்து விட முடியும்.

சமூகத்தில் பிரபலமாக இருப்பவர்களுக்கு இந்த சமூகக் குழுக்களால் இன்னும் பல அனுகூலங்கள் உண்டு. உதாரணமாக, அமெரிக்க அதிபர் ஒபாமா உலக மக்களுக்கு ஒரு செய்தியை அவசரமாகத் தெரிவிக்க விருப்பப்பட்டால் அவர் அதற்காகப் பத்திரிகை, தொலைக் காட்சி நிருபர்களைக் கூட்டி அறிவிக்க வேண்டியதில்லை. தன்னுடைய சமூக இணையதளக் குழுவில் அந்தச் செய்தியை அவர் பதிந்து விட்டால் அடுத்த நொடியே அது உலகம் பூராவும் பரவி விடுகிறது. அவருடைய ட்விட்டர் தளம் மூலம் அவருடைய அடுத்த நடவடிக்கை பற்றி உடனுக்குடன் தெரிந்துகொள்ள முடிகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் நம்முடைய கிழட்டு அரசியல்வாதிகளுக்கு இதெல்லாம் தெரியாமல் இருப்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை. ஆனால் அமிதாப் பச்சன், மல்லிகா ஷெராவத் போன்ற சினிமாக்காரர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனால் ஒரு பிரபலமான தமிழ் ஹீரோ நடிகர் ட்விட்டர் மூலமாக பல கல்லூரி மாணவிகளுக்கு வலை வீசி அவர்களோடு ஜாலியாக இருப்பதாக மகளிர் கல்லூரி வட்டாரத்தில் பரபரப்பாக இருக்கிறது. அந்த நடிகர் பெரிதாக வம்பில் மாட்டிக்கொள்ளும் வரை இந்த அஜால் குஜால் விளையாட்டு தொடரும் என்று நினைக்கிறேன்.

ஆர்க்குட், ஃபேஸ்புக் போன்ற இணையதள சமூகக் குழுக்களை விட

https://telegram.me/aedahamlibrary

நவீனமாகவும், பிரபலமாகவும் இருப்பது இப்போதைய ட்விட்டர். முற்றுப் புள்ளி, கமா போன்ற நிறுத்தற்குறிகளையும் சேர்த்து வெறும் 140 எழுத்துக்களே இதன் எல்லை. இந்த 140 எழுத்துக்களுக்குள் நீங்கள் ஒரு விஷயத்தைப் பதிந்தால் உங்களைப் பற்றி அறிந்த அத்தனை பேரும் அதை அறிந்துகொண்டு விடுவார்கள். உதாரணமாக, இன்றைய தினம் நீங்கள் எங்கே இருப்பீர்கள்; என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை நீங்கள் உங்கள் நண்பர்கள் அத்தனை பேரிடமும் தனித்தனியாகச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய தில்லை. ட்விட்டரில் அதைப் பதிவு செய்தால் போதும். இத்தகைய வசதியைத்தான் நம்முடைய வெளிநாட்டு இணைமைச்சரான சஷி தரூர் பயன்படுத்திக்கொண்டு வருகிறார். http://twitter.com/Shashi Tharoor/ விமானங்களின் இகானமி வகுப்பை அவர் கேட்டில் க்ளாஸ் என்று சொன்னதும் ஒரு வாசகர் அவரிடம் “உங்களை நாங்கள் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பினால் எங்களை மாடு என்று திட்டுகிறீர்களா?” என்று தன்னுடைய ட்விட்டரில் கேட்டிருக்கிறார். இந்த இணைய தளங்களில் உள்ள வசதி என்னவென்றால், சஷி தரூர் என்ற பெயரில் தேடினால் இந்த வாசகர் எழுதிய பதிலும் சேர்ந்தே கிடைக்கிறது என்பதுதான்.

சோனியா காந்தி உட்பட எல்லோருமே சஷி தரூரின் நகைச்சுவை உணர்வைப் புரிந்துகொள்ளாமல் அவருக்கு எதிராகக் கருத்து தெரிவித்திருப்பதால் சஷி தரூர் பின்னர் தன்னுடைய ட்விட்டரில் அந்த மாட்டுத்தொழுவப் பதிவை நீக்கிவிட்டார். ஆனாலும் ட்விட்டர் போன்ற இணையதள சமூகக் குழுக்களில் உள்ள பிரச்சினை, நீங்கள் பதிவேற்றம் செய்த பதிவை நீங்கள் நீக்கிவிட்டால்கூட அது வேறொருவரால் எடுத்துப் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கலாம். இது ஒரு நிரந்தரமான கரும்பலகை மாதிரி. A permanent black board. இதை Screenshot என்று அழைக்கிறார்கள்.

இவ்வளவும் நடந்த பிறகு நேற்றைய தினம் (22.9.2009) சஷி தரூரின் ட்விட்டருக்குள் சென்று என்ன எழுதியிருக்கிறார் என்று பார்த்தேன்.

Have a ridiculously full schedule tomorrow with 17 meetings/engagements. You always pay a price when u come back from a trip. Signing off! 12.34 PM Sep 22nd.

ஆஹா! இது மாட்டுத்தொழுவம் என்று சொன்னதைவிட ஆபத்தானதாயிற்றே என்று நினைத்தேன். ‘எங்களையெல்லாம் கோமாளிகள் என்று நினைத்தீரா? எந்த அர்த்தத்தில் ridiculous என்று சொல்லியிருக்கிறீர்?’ என்று அவருடைய சகாக்கள் அவரைப் பிடித்து உலுக்கினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

https://telegram.me/aedahamlibrary

கிழவர்களின் கூட்டத்தில் இளைஞர்கள் மாட்டிக்கொண்டால் இப்படித்தான் ஆகும். இதற்குப் பேசாமல் ராகுல் காந்தியே பிரதம மந்திரி ஆகிவிடலாம்!

https://telegram.me/aedahamlibrary